Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (11.09.2012) பக்கங்கள் 20 ஓசை - 345




யாழ். மாநகரில் மீண்டும் குளம்

04




மு.கா. எந்தப் பக்கம்?

05



சீன எதிர்ப்புக் கூச்சல்

10



பாரதியின் எழுத்துக்கள் பற்றி...

12



தயாராகிறது இஸ்ரேல்!

18

# கூட்டமைப்பை கைகழுவியது மு.கா.



கிழக்கில் ஆட்சி அமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுச்சேர்வது என்பது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத விடயம் என்று முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது. மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முடிவு எடுப்பதென்பது முற்றிலும் சாத்தியமற்றதாகவே இருக்கும். என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான ஹாபீஸ் அகமட் சயினுலாப்தீன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைக் கொண்ட முஸ்லிம் மாகாணமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். இலங்கையின் ஏனைய 7 மாகாணங்களும் சிங்களவர்களினதும், வடமாகாணம் தமிழர்களுக்கானது .என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் கிழக்கு மாகாணம் முஸ்லிம் முதலமைச்சரைக் கொண்ட மாகாணமாக இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பது என்றால் அரசாங்கத்தில் இருந்து விலகியே அதனைச் செய்தாக வேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் அது முற்றிலும் சாத்தியமற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கல்குடா தொகுதி அரசியல்வாதிகளின் அடாவடித்தனம் காரணமாக கல்குடா தொகுதிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்க வேண்டிய ஒரு உறுப்பினர் இல்லாது போயுள்ளது. அதனை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன். பிரதேசவாதம் கடந்த ஒரு அரசியலை செய்யவுள்ளேன். இத்தேர்தலில் எமக்கு ஆதரவு தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது சேவை தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு இன்றி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

## முஸ்லிம் முதலமைச்சர்; ஆட்சேபனை இல்லை

(மட்டக்களப்பு)

கிழக்கின் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரசுக்கு வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை பலத்தை கைப்பற்ற ஆளுங் கட்சி தவறியுள்ளதால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கி அந்தக் கட்சியின் ஆதரவை பெற்றுக் கொள்வதில் தனக்கு ஆட்சேபம் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை நடுத் தெருவில் விட்டுச் சென்றுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



## கூட்டமைப்பின் கோரிக்கை நிராகரிப்பு



(மட்டக்களப்பு)

கிழக்கில் ஆட்சி அமைப்பதற்குத் தமக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநரிடம் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்க வாய்ப்பு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்திருந்தன. இதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை இரண்டு கட்சிகளும் நேற்று முன தினம் மாலை கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்திருந்தன.

இந்தக் கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர். இந்த இரண்டு கட்சிகளுக்கும் கிழக்கு மாகாண சபையில் 15 ஆசனங்கள் உள்ளன. இந்த நிலையில் கிழக்கில் ஆட்சி அமைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## பி.பி.சி. சங்கர் காலமானார்

தமிழோசையின் முன்னாள் துறைப் பொறுப்பாளரும் பிரபல ஒலிபரப்பாளருமான சங்கரன் சங்கரமூர்த்தி கடந்த ஞாயிற்றுக் கிழமை லண்டன் மருத்துவமனை ஒன்றில் காலமானார். சுமார் இரண்டரை தசாப்தங்கள் தமிழோசை மூலமாக வானலைகளில் உலகின் பல்வேறு மூலை முடுக்குகளிலிருந்தும் தமிழோசையைக்

19 ஆம் பக்கம் பார்க்க



## மக்களின் கையேந்தும் நிலைக்கு காரணம் கடந்தகால அரசியல் தலைவர்களே

அழிவுயுத்தத்திற்கு வித்திட்டதன் மூலமாக எமது மக்களை கையேந்த வைத்தவர்கள் கடந்த கால அரசியல் தலைவர்களே என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாண பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவடடத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவின் கீழும் அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுவில் அந்தந்தப் பகுதிக் கிராம சேவையாளர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

அத்துடன் யாழ். மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதும், முன்னெடுக்கப் படவுள்ளதுமான செயற்றிட்டங்கள் தொடர்பிலும் வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழான விவசாயம், கடற்றொழில்துறை, கால்நடை, கைத்தொழில் அபிவிருத்தி சபை, விதாதாவள நிலையம் ஆகியவற்றினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தியதுடன், மக்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கான உள்ளீடுகளை வழங்குவது மட்டுமன்றி அவற்றினது பயன்பாடுகள், பெறுபேறுகள் தொடர்பிலும் துறைசார்ந்தவர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொணடார். அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தாமதமாவதற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி பூர்த்தி




மாணவர்களுக்கு சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான ஒரு வருட கால டிப்ளோமா கற்கைநெறியினை பூர்த்திசெய்த 39 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரினால் நேற்று யாழ். நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், ஆணையாளர் விஸ்வரூபன், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் எம்.ஏ.அலாம், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் இன்பராஜ், யுனிசெப் நிறுவனத்தைச் சேர்ந்த காமினி ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் குறித்த டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர், ஆணையாளர் உள்ளிட்ட அதிதிகளுக்கு நினைவுப் பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுகையில்,

இலங்கையில் சிறுவர்கள் தொடர்பாகப் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகமாகவுள்ளது. நீங்கள் பெற்றுக்கொண்ட இந்த ஒருவருட கால சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான டிப்ளோமா கற்கைநெறிகளின் மூலமாக அவ்வாறான பிரச்சினைகளை சாதுரியமாகக் கையாண்டு தீர்த்து வைக்க முயலவேண்டும் என்று குறிப்பிட்டார். (பா,இ)

# நீர் இறைக்கும் மோட்டர் சாதுரியமாகத் திருட்டு

(கரணவாய்)

கரவெட்டி விக்கினேஸ்வரா வீதியில் உள்ள வீடொன்றில் உட்புகுந்த திருடர்கள் ரூபா 20 ஆயிரம் பெறுதியான நீர் இறைக்கும் மோட்டரைக் களவாடிச் செனறுள்ளனர்.

முன்னாள் கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சிதம்பரப்பிள்ளையின் வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவத்தில் குறித்த நபரின் வீட்டுக்குள் உட்புகுந்த திருடர்கள் கிணற்றடியில் பாதுகாப்பான முறையில் அமைகப்பட்டிருந்த மோட்டர் அறையின் கதவை உடைத்து மோட்டரை சாதுரியமாக களவாடிச் சென்றுள்ளனர்.

தற்காலத்தில் இப்பிரதேசத்தில் களவுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும், பொதுமக்கள் இரவு வேளையினைப் பயப்பீதியுடனே கழிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

# கருத்தாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் பெண் பணியாளர்களுக்கான பெண்களும், சமூக சுகாதாரப் பிரச்சினைகளும் தொடர்பான கருத்தாடல் நிகழ்வு கடந்த 5, 6 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

மேற்படி வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நல்லூர் பிரதேச செயலகத்திலும் யாழ். மாநகர சபையின் பிரதான அலுவலகத்திலும் கடமையாற்றும் பெண் பணியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

5 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்திலும் 6 ஆம் திகதி யாழ். மாநகர சபையிலும் நடைபெற்றதாக யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானசோதி அறிவித்துள்ளார்.

# மீனவர்களின் பிரச்சினை யாழ். பிரதேச செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கடற்கரையோரமாக பொதுமக்கள் குடியிருப்புக்களை அமைத்திருப்பதன் காரணமாக கடற்றொழிலாளர்கள் தமது படகுகளை கரைக்குக் கொண்டுவந்து நிறுத்த முடியாமல் இருப்பதாக யாழ். பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கடற்றொழிலாளர்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இக்கூட்டத்தின்போது நாவாந்துறைப் பகுதியில் கடற்கரையோரமாக மணல் நீடைகள் நிறைந்திருந்த பகுதியில் மக்கள் குடியேறி குடியிருப்புக்களை அமைத்து தங்கியுள்ளனர்.

இதனால் கடற்றொழில் நடவடிக்கைக்குச் செல்லும் கடற்றொழிலாளர் தமது படகுகளை கடலில் இறக்கவும் பின்னர் கரையில் ஏற்றிவிடவும் இடம் இல்லாது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாக கடற்றொழிலாளர்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் அந்தப் பகுதியில் குடியேறியிருக்கும் குடும்பங்களை வேறு பகுதிக்கு மாற்றி தொழில் நடவடிக்கைக்கு ஆவன செய்து தரும்படி கோரப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த யாழ். அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தாம் மேற்படி பகுதிக்கு நேரில் விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்ததன் பின்னர் அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (பா)

# வலிப்பு நோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம்

## யாழ்ப்பாணத்தில் அரங்கேறுகிறது

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வலிப்பு நோய் சம்பந்தமான விழிப்புணர்வு நோக்கிய நடைப்பயணம் முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவின் ஏற்பாட்டிலேயே இந்நடைப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை காலை 7.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமாகி யாழ். பொதுநூலகத்தில் நிறைவு பெறும்.

நடைப்பயணத்தின் தொடர்ச்சியாக யாழ். பொதுநூலகத்தில் வலிப்பு நோய் சம்பந்தமான விசேட விரிவுரைகள், ஒளித் தொகுப்பு காட்சிகள் மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

இதில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் விசேட வலிப்புச் சிகிச்சை வைத்தியக் குழுவினர் கலந்துகொள்வதோடு, இந்நிகழ்வுக்கான ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

இந்த நடைப்பயணத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை நரம்பியல் பிரிவினர் கேட்டுள்ளனர். (இ)

# வீடமைப்பு அதிகார சபையின் மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலக குடியிருப்பு தினமான ஒக்ரோபர் முதலாம் திகதியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரம் வரைதல், கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளை நடத்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

'மாற்றமுறும் குடியிருப்புகளும் உருப்பெறும் வாய்ப்புக்களும்' எனும் தலைப்பில் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தகவல் மற்றும் பிரசாரப் பிரதிப் பொது முகாமையாளர் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

தரம் 1 தொடக்கம் தரம் 5, தரம் 6 தொடக்கம் தரம் 11, தரம 12 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சித்திரக் கண்காட்சி ஆக்கங்கள் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப பிள்ளைப் பருவ சிறுவர்களின் கலைத்துவமிக்க திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் 'அருண தகின ரடா' எனும் தலைப்பிலான சித்திரக் கண்காட்சி நான்காவது முறையாகவும் சிறுவர் செயலகத்தினால் நடத்தப்படவுள்ளது.

3 வயது முதல் 5 வரையான குழந்தைகள் எந்தவொரு தொனிப்பொருளையும் பிரயோகித்து சித்திரத்தை வரையலாம். வரையப்படும் சித்திரம் 12X16 அங்குல அளவிலான தாளில் அமையவேண்டும். ஒரு பிள்ளை ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும்.

அனைத்து சித்திரங்களின் பின்புறத்திலும் பிள்ளையின் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், ஆரம்ப பிள்ளைப் பருவத்தின் அபிவிருத்தி முகவரி, பிரதேச செயலர் பிரிவு, பிறந்த திகதி பிள்ளையிடம் கேட்டறிந்து சித்திரத்தின் தொனிப் பொருள், பிள்ளையால் சித்திரம் வரையப்பட்டது என்பதனை தாய், தந்தை, பாதுகாவலர் அல்லது ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலைய ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் 500 சித்திரங்களுக்கு சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதுடன், இச்சித்திரங்களை உள்ளடக்கிய கண்காட்சி கொழும்பில் நடைபெறவுள்ளது.

சித்திரங்கள் அனைத்தும் 'அருண தகின ரடா 2013' என சித்திர உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், சிறுவர் செயலகம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, இல 175ஏ, நாவல வீதி, நுகேகொடை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

# கண்காணிப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான இம்மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.08.2012 அன்று
காலஞ்சென்ற
அமரர்
அந்தோனிப்பிள்ளை
அமலன் தேவதாஸ்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 11.09.2012 செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வேளையில் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேலணை - 04 (C/1721) குடும்பத்தினர்.

# இரணைமடுக் குள புனரமைப்பு
# ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி



(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தின் புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 12.398 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக நீர்ப்பாசன பொறியியலாளர் சுதாகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டு தற்போது 34 அடியாகவே உள்ளது இதனை மேலும் இரண்டு அடி உயர்த்துவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் பின்னர் 36 அடிவரையிலான நீரை குளத்தில் சேமிக்க முடியும்.

தற்போது இருப்பதை விடவும் அதிகளவான நீரை சேமிக்க ஏற்பாடு செய்தாலும் 38 அடிக்குமேல் வான்பாய இடமளிக்க முடியாது. அவ்வாறு நேர்ந்தால் குளத்திற்கு மறுபுறத்தே இருக்கும் கிராமங்கள் நீரில் மூழ்கிவிடும் அபாயம் உள்ளது. அத்துடன் இரணைமடுக்குள அணைக்கட்டு வலுவாக்கல் பணியின் போது மேலதிகமாக வான்கதவுகளும் அமைக்கப்படவுள்ளன.

இதனை விட இரணைமடுக்குள நீர் வயல்களுக்குச் செல்லும வாய்க்கால்களை சீரமைப்பதற்காக ஐ.எப்.ஏ.டி.நிறுவனம் 29,33 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. குளம் மற்றும் வாய்க்கால்கள் உரிய முறையில் சீரமைக்கப்பட்டால் குளத்திலிருந்து நீர்க்கசிவு மற்றும் நீர் விரயம் என்பன தடுக்கப்பட்டு விடும் இதன் மூலம் குளத்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த சாவகச்சேரியில் திடீர் பரிசோதனை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பிற்கான திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

மழைக் காலம் ஆரம்பமாவதை இட்டு சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பிரதேங்களில் டெங்கு நோய் ஒழிப்பிற்கான சுகாதார பரிசோதனைக் குழுவும் பொலிஸாரும் இணைந்து திடீர் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர்.

வீடு வீடாகச் செல்லும் சுகாதார பரிசோதனைக் குழுவினர், நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக அமைந்துள்ள வீட்டுக், காணி, உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். நீர் தேங்கிநிற்கக் கூடிய பொலித்தீன், சிரட்டை, பழைய ரயர் போன்ற பொருட்கள் காணப்படுமிடத்து அக்காணி, வீட்டு உரிமையாளர்கள் மீது வழக்கு, தொடரப்படுகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை பெருங்குளம், கவ்வயல் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வீடுகள், காணிகள் அனைத்தும் சுகாதாரபரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரால் பரிசோதிக்கப் படும் என்றும், தமது வீட்டுக் காணிகளை துப்புரவு செய்து டெங்கு நோய் ஒழிப்பிற்கு ஒத்துழைக்குமாறும் சுகாதார பரிசோதகர்கள் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

கடந்த வாரம் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திடீர் பரி சோதனையின் போது பலர் மீது வழக்கு தொடரப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# மன்னாரிலுள்ள வீதிகளுக்கு வேகத்தடை அமைக்கக் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சகல வீதிகளும், கிராமங்களில் உள்ள வீதிகளும் கொங்கிரீட் வீதியாக மற்றப்பட்டுள்ள போதும், பல முக்கிய வீதிகளுக்கான வேகத்தடைகள் எவையும் அமைக்கப் படவில்லை எனவும் இதனால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு வீதிகள் தற்போது கொங்கிரீட் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் வாகனங்கள் அதிகூடிய வேகத்தில் செல்லுகின்றன. வேகத்தடைகள் உள்ள இடங்களில் குறித்த வாகனங்கள் நிறுத் தப்பட்டு மீண்டும் செல்லுகின்றன.

ஆனால் பல கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள கொங் கிரீட் வீதிகளுக்கான வேகத்தடைகள் எவையும் அமைக்கப்பட வில்லை. இதனால் விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. சிறுவர்கள் அதிகளவில் இவ்வீதியால் செல்வதனால் பாதிப் புக்களை உடன் குறைக்கும் வண்ணம் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வேகத்தடைகள் அமைக்கப்படாத வீதிகளுக்கு உட னடியாக அவற்றை அமைக்குமாறு மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி (யு.சு.ஏ) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநாகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி அ.ஞானஜோதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி மு.ப.09.00 - மு.ப.11.00 வரை பழம் வீதி, ஆறுகால்மடத்திலும், மு.ப.11.30 - பி.ப.11.30 வரை ஆறுகால்மடம் சனசமூக நிலையத்திலும், 13ஆம் திகதி மு.ப.09.00 - மு.ப.11.00 வரை செழியன் வீதியிலும், மு.ப.11.30 - பி.ப.1.30 வரை அராலி வீதி, புதிய குடியிருப்பு சனசமூக நிலையத்திலும், 14ஆம் திகதி மு.ப.9.00 - 10.00 வரை மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்சந்தியிலும், மு.ப.10.00 - 11.00 வரை ஜின்னா வீதியிலும், மு.ப.11.00 - நண்பகல் 12.00 வரை ஆசாத் வீதியிலும், நண்பகல் 12.00 - பி.ப. 01.30 வரை நாவலர் வீதி, ஒழுங்கை பகுதியிலும், 17ஆம் திகதி மு.ப. 09.00 - மு.ப.10.30 வரை கெனடி வீதி, சேமக் காலை வீதியிலும், மு.ப.10.30 - நண்பகல் 12.00 வரை நாவலர் வீதி, 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்குத் தெருவிலும், நண்பகல் 12.00 - பி.ப.01.30 வரை நாவலர் வீதி, நாவாந்துறை தபாற்கந்தோர் அருகிலும் இடம்பெறவுள்ளது. 18ஆம் திகதி மு.ப. 09.00 - 10.00 வரை வசந்தபுரம் சனசமூகநிலையத்திலும், மு.ப. 10.00 - 11.00 வரை நித்திய ஒளி சனசமூக நிலையத்திலும், மு.ப.11.30 - பி.ப.01.30 வரை சூரிய வெளியிலும், 19ஆம் திகதி மு.ப.09.00 - மு.ப.11.00 வரை சென்.நீக்கலஸ் சனசமூக நிலையத்திலும், மு.ப.11.30 - பி.ப.01.30 வரை கோவில் ஒழுங்கையிலும் இடம்பெறவுள்ளது.

-தொடரும்-

# வாகன நெரிசலை ஏற்படுத்தும் சாரதிப்பயிற்சி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சாரதி பயிற்சிப்பாடசாலைகளில் சாரதிய பயிற்சிபெறும் பயிலுநர்கள் யாழ் நகர வீதிகளில் பயிற்சியில் ஈடுபடுவதால் நகரில் வாகன நெரிசல் ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

நகரிலுள்ள சாரதியபயிற்சி பாடசாலைகள் தமது பயிலுநர்களுக்கு யாழ் நூல் நிலைய பகுதி, அதனோடு இணைந்த பகுதிகளில் உள்ள வீதிகளில் பயிற்சி வழங்கிவந்தன. தற்போது இப்பகுதியில் வீதிபுனரமைப்புப் பணிகள் நடை பெறுகின்றமையால் வீதியின் சில பகுதிகள் அவ்வப்போது மூடப்படுவதுடன் சில இடங்களில் மட்டுப் படுத்தப்பட்ட போக் குவரத்து நடைபெறுகின்றது. இதனால் இப்பகுதியைப் பயன் படுத்த முடியாத சாரதிய பயி லுநர்கள் நகரப்பகுதி வீதிகளில் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். கனரக வாகனங்களின் வருகை யால் வாகன நெரிசலை எதிர் நோக்கும் நகர் வீதிகளில் இவர்கள் பயிற்சியில் ஈடுபடு வதனால் விபத்துகள் ஏற்படக் கூடிய அபாயநிலை தோன்றியுள்ளது.

எனவே நகருக்கு வெளியே இவர்களைப் பயிற்சியில் ஈடுபடுத் துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (54)

# இலங்கை வங்கியினால் ஊற்றுக்கணக்கு அறிமுகம்

(வலிகாமம்)

சுன்னாகம் இலங்கை வங்கி தனது 73ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு "ஊற்றுக்கணக்கு" எனும் புதிய கணக்கொன்றினை அறிமுகம் செய்துள்ளதாக இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக்கணக்கினை 1000 ரூபா வைப்பிடுவதன் மூலம் எவரும் ஆரம்பிக்கலாம் எனவும், இது குறிப்பிட்ட காலத்திற்கு மீளப் பெறாதவர்களிற்குரியது எனவும் வங்கி வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

மேலும் மீளப் பெறாத நிலை ஆறுமாதம் வரை காணப்பட்டு, வைப்பில் 10,000 ரூபா விற்குக் குறையாமல் இருப்பின் இலவசக் காப் புறுதித் திட்டத்தில் குறித்த சேமிப்பாளர் இணைத்துக் கொள் ளப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் பின் உரித்தாளருக்கும் காப்புறுதி நன்மை வழங்கப்படுவது இக்கணக்கின் சிறப்பம்சமாகும். 3வருடத்தின் பின் ஊற்றுக்கணக்கில் இருந்து பணத்தை மீளப்பெற்றுக் கொள்ளலாம் இதற்கான வட்டி 2 வீதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# மனநோயாளி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பிரதேசத்தில் மனநோயாளியான ஒருவர் தூக்குப்போட்டு தற்கொலை செயதுள்ளார். நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவில் மத்தி நவரத்தினராஜா வீதியைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை ராஜகுரு (வயது-43) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கைதடி வளர்மதி சனசமூகநிலையத்தின் 53ஆவது ஆண்டு விழாவும் புதிய சனசமூகநிலைய கட்டடத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இதில் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சனசமூகநிலைய கட்டடத்தையும், நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வையும், நிலையத்தின் ஸ்தாபகர் திரவியம் சனசமூகநிலையத்தின் முன்னாள் தலைவரைக் கௌரவிப்பதையும் காணலாம்.

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

திலப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## கல்வியற்ற மனிதனும் அழிந்தவனே!

நடந்து முடிந்த யுத்தத்தில் தங்கள் வாழ்வின் ஆதாரங்கள் அனைத்தையும் முற்றாக இழந்த மக்களின் பிரச்சினைகளை அத்தகைய இழப்புகளைச் சந்திக்காத தமிழ்மக்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்களா என்பது கேள்விக்குறியே. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் அல்லாடும் மக்களின் பாடும், இழப்புகளிலிருந்து தவிர்ந்துகொண்ட மக்களின் உரிமைக்குரலும் வேறு வேறாக ஒலிப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

தமிழ்மக்களின் மூச்சாக இருந்துவந்த கல்வியை எடுத்துப் பார்த்தால் கூட, இந்த முரணைச் சட்டென்று யாரும் அவதானித்துவிட முடியும். விசுவமடு, புதுக்குடியிருப்பு பகுதிகளில் முன்பள்ளிச் சிறுவர்கள் கூட, மரங்களே வகுப்பறைகளாகக் கர்மசிரத்தையுடன் படிப்பதையும், சம்பளம் ஒழுங்காகக் கிடைக்காத நிலையிலும் ஆசிரியர்கள் பாடம் நடத்திக் கொண்டிருப்பதையும் காண முடியும். கல்விக்காக அவர்கள் படும் கஷ்டங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இன்னொரு பக்கம், மாணவர் கல்வியைப் பொருட்படுத்தாத சம்பள உயர்வுக்கான வேலைநிறுத்தங்கள் தொடர்வதையும், அதிபர் நியமனங்களுக்கும் ஆசிரிய இடமாற்றல்களுக்குமாக மொட்டைக் கடிதங்கள் விநியோகிப்பதும், மாணவர்களைப் பயன்படுத்துவதுமான நிலைமைகளைப் பார்க்க முடிகிறது. இவர்களிடம் அடிப்படைத் தேவைகள் தீர்ந்த திமிர் என்றே இதைக் காணமுடியும்.

தாங்கள் எவ்வளவு துன்பப்பட்டாலும், தங்கள் பிள்ளைகளுக்குத் தரமான கல்வியைத் தந்துவிட வேண்டும் என்ற பதைப்பு ஒருபக்கத்திலும், நம்முடைய அடிவளவுக்கு அப்பால் எதையும் நாம் யோசிக்க மாட்டோம் என்கிற மேட்டிமை மறுபக்கத்திலுமாக தமிழ்ச் சமூகம் பிளவுண்டே கிடக்கிறது. ஆனால், அரசியல் லாபத்திற்காக மக்களை உணர்ச்சிவசப்படுத்துவோர், எல்லோருக்கும் ஒரே பிரச்சினைதான் என்று காட்ட முற்படுகிறார்கள். அரசியல் இலக்கை அடைந்துவிட்டால் நீங்களெல்லாம் அதன் பிறகு கற்றுக்கொள்ளலாம் என்று கல்விநிலையில் வீழ்ந்து கிடப்பவர்களிடம் விட்டேற்றியாகச் சொல்லமுடிகிறது இவர்களுக்கு!

பிறக்கும்போது அனைவரும் சமமாகவே பிறந்து இருந்தாலும், வாழும் காலத்தில் அவர்களை உயர்த்தி நிறுத்துவது கல்விதான். இக்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலும் இதுதான் சமுதாய நிலை. உயர்ந்துவிட்டவர்கள் தாழ்ந்திருப்பவர்களிடம் உதாசீனத்தோடு கதைகள் சொல்ல முற்படுவதைக் கொழுப்பென்றுதான் சொல்ல வேண்டும்.

உலகம் தோன்றிய காலத்திலிருந்தே அறிவுக்கும், அறியாமைக்கும் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த முடிவில்லாத போரில் அறியாமை தோல்வியடைந்துகொண்டே இருக்கிறது. அறிவு மேலும் மேலும் தன்னை மேலேற்றிக் கொண்டுவிடுகிறது. அறிவில் உயர்ந்து இருப்பவர்கள் அறிவைப் பெற்றுக்கொள்ளத் துடிப்பவர்களின் பாடுகளைப் புரிந்துகொள்வதே இல்லை.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பலருள்ளும், மூத்தவனை வருக என வரவேற்காமல், கல்வியறிவு மிக்கவனையே உலகம் வரவேற்கும் என்று சங்க இலக்கியமாகிய புறநானூறும் பாடுகிறது. "கற்றோருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்று பிற்கால இலக்கியங்களும் பேசுகின்றன.

பலபேர் நடந்து செல்லக்கூடிய பாதையில் செடியை வளர விட்டால் அது அழிந்துபோகும். கல்வியற்ற மனிதனும் அழிபட்டுத்தான் போவான்..." என்றார் குழந்தைகளின் கல்வியைப் பற்றி முதன்முதலில் ஆராய்ந்த சிந்தனையாளர் ரூசோ.

சமூகம் அழிந்துகெட்டுப் போகாமல் இருக்க எல்லோருக்கும் கல்விகிடைப்பதான சூழலை ஏற்படுத்த வேண்டும்; ஒத்துழைப்புத் தர வேண்டும். அதைப் புறக்கணித்துவிட்டு வேறு போராட்டக் கதைகள் பேசுவதும்கூட ஏமாற்றுத்தான்! - ஆசிரியர்

# கிழக்கில் அரசாங்கத்தைத் தவிர யார் ஆட்சியமைத்தாலும் ஆதரவு

## கூறுகிறது ஐ.தே.க.

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தை தவிர வேறு யார் ஆட்சியை அமைத்தாலும் அவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவையும் வழங்கும். அரசாங்கத்திற்கு வட மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் 60 ஆயிரத்து 422 வாக்குகள் குறைவடைந்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 891 வாக்குகள் அதிகரித்துள்ளன என்று ஐ.தே.க.வின பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். அதேபோன்று நடைபெற்று முடிந்த மூன்று மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகள் குறித்து ஆராய சட்டத்தரணி தயா பெல்பெல மற்றும் கௌரி தவராசா தலைமையிலான ஐவர் அடங்கிய குழு அறிக்கை தயாரிக்கவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எவ்வாறாயினும் இம்முறை அரசு பாரியளவிலான வீழ்ச்சியைக் கண்டுள்ளது. ஆனால் ஐ.தே.க.வின் வாக்குகள் அதிகரித்துள்ளன.

திருகோணமலை முதலாவது வாக்களிப்பு நிலையத்தில் வாக்கு கணிப்புகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இதனை தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளோம். கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்தால் ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவை வழங்கும்.

எவ்விதமான ஆதரவும் ஆளும் கட்சிக்கு ஐ.தே.க. வழங்காது. பொது மக்கள் தற்போது மாற்றி யோசிக்க ஆரம்பித்துள்ளனர். அரசாங்கத்தின் வாக்குகளில் வீழ்ச்சி காண்கின்றமை அரசியல் மாற்றத்தின் ஆரம்பம் என்றார்.

# இலங்கை யாத்திரிகர்களின் தமிழகப்பயணம் குறையவில்லை

தமிழகத்திற்கு பயணங்களைத் தவிர்த்துக்கொளளுமாறு இலங்கை பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளபோதும் அங்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் தமிழகத்திற்கு யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கை பிரஜைகள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த அறிவித்தலை அடுத்தும் தமிழகத்திற்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் வீழச்சி ஏற்படவில்லை என சென்னையிலுள்ள மகாபோதி நிலையத்தின் தேரர் ஒருவரை மேற்கோள்காட்டி 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த புதன்கிழமை சும[illegible] ஆயிரத்து 200 இலங்கை யாத்திரிகர்கள் சென்னையிலுள்ள மகா போதி நிலையத்திற்கு சென்றிருந்ததாக கலவானே மகாநாம தேரர் த ஹிந்து பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

# நான்குமாடி விடுதிக்கு அடுத்த மாதம் லிப்ட் வசதி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ விடுதிகளைக் கொண்ட நான்கு மாடிக்கட்டடத்திற்கான லிப்ட் வசதி ஏற்படுத்தித்தரப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபை யாழ். போதனாவைத்தியசாலை நிர்வாகத்திற்கு கடித மூலம் அறிவித்துள்ளது.

நேற்று, யாழ் போதனாவைத்தியசாலையின் பதில்பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா இந்தத்த கவலைத் தெரிவித்தார். நீண்டகாலமாக இந்த மாடிக்கட்டடத் தொகுதிக்கான "லிப்ட்" பொருத்தும் பணிகள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்படுவது தாமதமடைந்து வருவது குறித்து அவரிடம் கேட்ட போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஏற்கனவே குறித்த நான்குமாடிக் கட்டடத் தொகுதிக்கான 'லிப்ட்' பொருத்தும் பணிகளை யாழ். போதனாவைத்தியசாலை நிர்வாகம் இலங்கை. மின்சார சபையிடம் ஒப்படைத்திருந்தது. அத்துடன் அந்த வேலைகளை மேற்கொள்வதற்காக இலங்கை மின்சாரசபையிடம் 83 இலட்சம் ரூபாவையும் வழங்கியிருந்தது எனினும் அந்த நான்கு மாடிக் கட்டடத்திற்கான 'லிப்ற்' பொருத்துவதற்கு சில விசேட பாகங்கள் வெளிநாடு ஒன்றில் இருந்து தருவிக்க வேண்டியிருந்ததன் காரணமாக காலதாமதமடைந்து வந்தது. தற்சமயம் இதற்கான பணிகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபை யாழ். போதனாவைத்தியசாலை நிர்வாகத்திற்கு கடித மூலம் அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மாகாண உறுப்பினர்களின் விபரம் இந்த வாரம் வர்த்தமானியில்

(கொழும்பு)

மூன்று மாகாண சபைகளுக்கும் தெரிவான உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை இந்த வாரத்திற்குள் வர்த்தமானியில் வெளியிட உத்தேசித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர்களின் தகவல்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைத்து வருவதாகவும், அதற்கிணங்க தெரிவான அணைத்து உறுப்பினர்களினதும் விபரங்கள் கிடைத்தவுடன், பெயர்ப்பட்டியலை வர்த்தமானியில் அறிவிக்கவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையளார் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# மழைநீர் தேங்குவதைத் தடுக்க மாநகரசபை புதிய வழிமுறை

(சிகரம்)

யாழில் தனியார் பேருந்துத் தரிப்பிடத்தினை வேறு இடத்திற்கு மாற்றி மீண்டும் அதே இடத்தில் குளம் ஒன்றினை அமைத்து நீரைச் சேமிப்பதன் மூலம் யாழ். மாவட்டத்தில் மழைநீர் தேங்கி நிற்பதைத் தடுக்கலாம் என யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்

யாழ். நகரப்பகுதியில் தற்போது தனியார் பேருந்துத் தரிப்பிடம் அமைந்துள்ள இடத்தில் முன்னர் இருந்த குளம் நிரவப்பட்டுள்ளதாலேயே மழை காலங்களில் நீர் வழிந்தோட முடியாத சூழ்நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு நீர் வழிந்தோட முடியாத சூழ்நிலை காணப்படுவதால், வீதிப் போக்குவரத்தின் போது வாகன நெரிசல் ஏற்படுவதுடன், மழைநீர் தேங்கிநிற்பதால் மழை காலங்களில் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது.

தற்போது தனியார் பேருந்துத் தரிப்பிடம் அமைந்திருக்கும் இடத்தில் மீண்டும் குளம் ஒன்றினை தோண்டுவதனூடாக நகரப் பகுதிகளில் நீர் தேங்குவதைத் தடுக்க முடியும். மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய குளங்களும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் புனரமைக்கப்படும்

இதேவேளை, யாழ்ப்பாணத்திற்கு நீண்ட தூரத்திலிருந்து வரும் தனியார் பேருந்துகள் தரித்து நிற்பதற்காக முனீஸ்வரன் வீதியில் புல்லுக் குளத்திற்கு அருகில் புதிய பேருந்துத் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டு வரும் நிலையில் இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் ஏற்படும் வாகன நெரிசல்களை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்வதால் கிடைக்கக்கூடிய முதலமைச்சர் பதவியா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் அணிசேர்வதால் கிழக்கு மாகாணசபை ஆட்சியிலும் இருந்தவாறு, மத்திய ஆட்சியிலும் கிடைக்கக்கூடிய செல்வாக்கா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் இருப்பதாகத் தெரிகிறது.**





# மு.கா. எந்தப் பக்கம்?



**கோ. ருஷாங்கன்**

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கா ஆதரவு வழங்குவது என்பது குறித்து, கட்சித் தொண்டர்களுடன் ஆராய்ந்து உயர்மட்டக் கூட்டத்தின் பின்னரே தீர்மானிக்கப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் முதலில் தன்னுடன் தொடர்புகொண்டு ஆட்சியமைக்க ஆதரவு கோரியதாகத் தெரிவித்த அவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினர் சஜீன் வாஸ் குணவர்த்தன ஐ.ம.சு.மு.க்கு ஆதரவு வழங்குமாறு தம்முடன் பேசியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, இதுகுறித்த இறுதி முடிவை எடுக்க முன்னர், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு வெற்றியீட்டித்தந்த கட்சித் தொண்டர்கள் மற்றும் வேட்பாளர்களைச் சந்தித்து ஆராய்வதற்காக மு.கா. தலைவர் ரவூ:.ப் ஹக்கீம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவே கல்முனைக்குப் புறப்பட்டுச் சென்றிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### எந்தப் பக்கம்?

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸுக்கு இம்முறை தேர்தலில் கிழக்கில் அளிக்கப்பட்ட வாக்குகள் பெரும்பாலும் அரசாங்கத்தின் மீதான அதிருப்தி காரணமாக அளிக்கப்பட்ட வாக்குகள் என்றும், குறிப்பாக முஸ்லிம்களின் இதயமான பள்ளிவாசல்கள் தாக்கப்பட்ட சம்பவங்களாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்த கொழும்பு நவமணி பத்திரிகையின் ஆசிரியர் என்.எம்.அமீன், இதன் காரணமாக, ஐ.ம.சு.மு.க்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் மு.கா.வுக்கு சிக்கல்கள் இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

டான் தொலைக்காட்சியின் பத்திரிகைப் பார்வை நிகழ்ச்சியில் கொழும்பிலிருந்து தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாண ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்று கட்சியின் ஒரு சாரார் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்த அமீன், தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக அரசாங்கத்துடன் இணைந்தே போட்டியிட முயற்சித்த ரவூப் ஹக்கீம், பின்னர் ஆசனப் பகிர்வில் ஏற்பட்ட பிணக்கு காரணமாகவே தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்த பின்னர், அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் ஹக்கீம் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் கண்டனங்கள் குறித்த



தமது அதிருப்தியை தம்மைச் சந்தித்த அரசாங்கப் பிரதிநிதிகளிடம் ஹக்கீம் வெளியிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எது எப்படி இருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைக்கும் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்தால், புலிகள் தரப்புடன் மு.கா. இணைந்துவிட்டதாக தெற்கில் தீவிர பிரசாரம் முன்னெடுக்கப்படும் நிலை தோன்றலாம் என்றும், இதனால், கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### பள்ளிவாசலைத் தாக்கியவர்களா? பள்ளிவாசலுக்குள் கொலை புரிந்தவர்களா?

இதேவேளை, பள்ளிவாசல்கள் தாக்கப்பட்ட சம்பவங்களினால் முஸ்லிம்கள் அரசாங்கத்தின்மீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, பள்ளிவாசலுக்குள் புகுந்து முஸ்லிம்களைக் கொன்றொழித்த புலிகளின் ஆதரவு சக்தியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மு.கா. எப்படி இணைந்து ஆட்சியமைக்க முடியும் என்று கேள்வியெழுப்பினார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சம்சுதீன்.

தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது அவர்களுக்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசி யக்கூட்டமைப்போ ஒருபோதும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்துக் கரிசனை காட்டியதில்லை என்று தெரிவித்த அவர், நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ரவூ:.ப் ஹக்கீம் கலந்துகொண்டபோதும், தமிழர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின்னர் முஸ்லிம்கள் பற்றிப் பார்க்கலாம் என்று புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்ததையும் நினைவூட்டினார்.

இப்படியான நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்தாலும், எதிர்காலத்தில் அரசாங்கத்துடன் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகளில் தமிழ்ப் பிரதிநிதிகளே கலந்துகொண்டு பேசுவார்கள் என்றும், முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்த கரிசனையை அவர்கள் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்றும், டான் தொலைக்காட்சியூடாகத் தொடர்புகொண்டு பேசிய சம்சுதீன் தெரிவித்தார்.

### முதலமைச்சர் பதவியா? மத்திய அமைச்சுக்களா?

கிழக்கு மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. முதலில் தமிழ்ப் பிரதிநிதியொருவரை முதலமைச்சராக நியமித்து பின்னர் சுழற்சி முறையிலேயே காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியைத் தர முடியும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தரப்பில் கூறப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

எனினும், இந்தப் பேரம் பேசலில், முஸ்லிம் காங்கிரஸுக்கு மத்தியில் மேலும் ஓரிரு அமைச்சுப் பதவிகளைத் தருவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாராக இருப்பதாகவும் அரசியல் உயர் வட்டாரங்கள் மூலம் அறியக்கிடைக்கிறது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்வதால் கிடைக்கக்கூடிய முதலமைச்சர் பதவியா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் அணிசேர்வதால் கிழக்கு மாகாணசபை ஆட்சியிலும் இருந்தவாறு, மத்திய ஆட்சியிலும் கிடைக்கக்கூடிய செல்வாக்கா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் இருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தால், மத்திய அரசாங்கத்தில் ஏற்கனவே இருக்கக்கூடிய அமைச்சுப் பதவிகளும், செல்வாக்கும் பாதிப்படைவதுடன், காங்கிரஸ் புலிகள் சார்புக் கட்சியுடன் சேர்ந்துவிட்டது என்ற பிரசாரத்தையும் எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்படும் என்று கொழும்பு அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமைகளை வைத்துப் பார்க்கும் போது, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கக்கூடிய சாத்தியங்களே அதிகம் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

# முஸ்லிம் காங்கிரஸுடனான கூட்டு அழுத்தங்களுடன் இருக்கக்கூடாது

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாடு இன்று பொய்யாகி விட்டது. அநாவசியமான அழுத்தங்களுக்கு அடிபணிந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் அரசாங்கம் கூட்டணிக்கு செல்லக்கூடாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

சர்வதேச சூழ்ச்சிகள் மற்றும் பிரிவினைவாத சக்திகள் போன்ற பாரிய சவால்களை எதிர்கொணடே அரசு தேர்தலைச் சந்தித்தது. இதில் பாரிய வெற்றியையும் பெற்றுக் கொண்டுள்ளது.


இவ் வெற்றியானது சர்வதேசத்திற்கான விசேட செய்தியாகக் கொள்ள 'முடியும்.

இலங்கைக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாரியளவிலான சவால்கள் காணப்பட்ட நிலையிலேயே கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் தேர்தல்கள் நடைபெற்றன.

கிழக்கு மாகாணம் தமிழ் மககளின் பூர்வீக நிலம், தாயகம் என்றெல்லாம் பிரிவினைவாத சக்திகள் பிரசாரம் செய்தன. ஆனால் இன்று அனைத்தும் பொய்யாகிவிட்டன.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும் தொகையானோர் தேர்தலில் வாக்களித்தனர்.

இவர்கள் ஆளும் மற்றும் எதிர்த்தரப்புகளை ஆதரித்ததுடன் பிரிவினைவாத கட்சிகளையும் ஆதரித்திருந்தனர். இது ஆபத்தான விடயமாகும்.



எனவே அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் கூட்டணியமைக்கும் போது வீண் அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடாது.

தேர்தல் வெற்றியின் ஊடாக சர்வதேச நாடுகளுக்கு சிறந்த செய்தியினை இந்த நாட்டு மக்கள் கொடுத்துள்ளனர்.

பிரிவினைவாத கொள்கைகளுக்கு மக்கள் அனுமதி வழங்கவிலலை. அரசாங்கமும் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றார்.

# தேர்தல் முடிவுகளை ஏற்க மறுக்கும் ஜே.வி.பி

(கொழும்பு)

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தல் முடிவுகள் நியாயமான, பக்கச்சார்பற்ற முடிவுகள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்றுமுன்தினம் கட்சியின் தலைமையகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கம் தனது விருப்பப்படி தெரிவுசெய்த மூன்று மாகாணங்களுகே தேர்தலை நடத்தியது. அரசாங்கம், அரச வளங்கள், அதிகாரம் என்பவற்றை பயன்படுத்தி, வாக்காளர்களுக்கு இலஞ்சம் மற்றும் பரிசுகளை வழங்கி மக்கள் மத்தியில் இருக்கும் அரசாங்கத்திற்கான எதிர்ப்பை அடக்கியதுடன் உண்மையான விருப்பத்தை திரிபுபடுத்தியது. இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் கூட அரசாங்கத்திடம் இருந்து மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை.

தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கத்தை சேர்ந்தவர்களுக்கு, வாகனங்கள், அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் ஆனால் மக்கள் நாளை முதல் தமது பிரச்சினைகளுடன் வாழ ஆரம்பிப்பர்.

கல்விக்கு கூடியளவு நிதி ஒதுக்கீடு, விவசாயிகளுக்கு நிவாரணம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகள் உட்பட ஏனைய பிரச்சினைக்கு தீர்வோ, நிவாரணமோ கிடைக்காது. இதனால் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்க வேண்டிய நிலைமை ஏற்படும். இந்தத் தேர்தல் முடிவுகளை கவனத்தில் கொள்ளாது மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்தும் போராட்டங்களுக்கு ஜே.வி.பி தலைமையேற்கும்.

# இரசாயனத் திரவியங்கள் ஏற்றிவந்த கப்பலில் தீ

(கொழும்பு)

இலங்கைக்கு இரசாயனத் திரவியங்களை ஏற்றி வந்த கப்பல் ஒன்று இந்திய மும்பை கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் திடீர் தீ விபத்துக்கு உள்ளானது.

நேற்றுமுன்தினம் மாலையில் இரசாயனப் பொருட்களை ஏற்றி ஆம்ஸடர்டாம் பாலம் அருகே சென்ற போது சரக்கு கப்பலில் திடீர் தீ ஏற்பட்டுள்ளது.

பின்னர் தகவல் அறிந்து மும்பை கடலோரப்படை அதிகாரிகளின் இரண்டு கப்பல்கள் வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டன.

நடந்த ஆய்வில் கப்பலின் இயந்திரப்பகுதி அருகே சத்தம் கேட்டதாகத் தெரியவந்தது. கப்பலின் மத்திய பகுதியிலும் தீ பற்றி இருந்தது. பின்னர் தீயணைக்கப்பட்டது. இக்கப்பல் இன்று கொழும்பை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மூன்று இலட்சம் பரீட்சார்த்திகள் அடையாள அட்டைக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள சுமார் மூன்று இலட்சம் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணபித்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

அக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 16 வயது பூர்த்தியாகும் பாடசாலை பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

இதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த ஜுலை மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. பல்வேறு காரணங்களினால் உரிய கால அவகாசத்திற்குள் விண்ணப்பிக்க முடியாமற்போன பாடசாலை பரீட்சார்த்திகள் தாமதிக்காது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

# பக்கச்சார்பற்ற வகையில் தேர்தல் ஆணையாளரின் பணி

## பாராட்டுகிறது ஐ.தே.க.



(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய பக்கச்சார்பின்றி செயற்பட்டார் 'என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சுயாதீனமானதும், நியாய மானதுமான முறையில் தேர்தலை நடாத்தவே தேர்தல் ஆணையாளர் முனைப்புக் காட்டினார்.

கடந்த காலங்களில் பதவி வகித்த தேர்தல் ஆணையாளர்களை விடவும், பக்கச்சார்பற்ற நிலையில் தற்போதைய தேர்தல் ஆணையாளர் கடமையாற்றினார்.

தேர்தல் காலத்தில் சிறு சிறு சம்பவங்களும் முறைகேடுகளும் இடம்பெற்ற போதிலும் அதற்கு தேர்தல் ஆணையாளர் பொறுப்புதாரி அல்ல.

இதேவேளை, பெருமளவான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் இம்முறை தேர்தலில் வாக்களிக்க வில்லை. அரசாங்கத்தின் மீதான அதிருப்தி காரணமாக வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் ஆளும் கட்சி நிச்சயம் ஆட்சியமைக்கும்

(கொழும்பு)



கிழக்கு மாகாணசபையில் ஆளும் கட்சி நிச்சயமாக ஆட்சியமைக்கும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஆட்சி அமைக்கும் போது கூட்டணிக் கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பு, ஆளும் கட்சிக்குக் கிடைக்கும். எனவே கிழக்கு மாகாணசபையில் ஆட்சியை நிறுவுவதில் சிக்கல் இருக்காது.

நடைபெற்று முடிந்த 'கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு 14 ஆசனங்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு 7 ஆசனங்களும், தேசிய சுதந்திர முன்னணிக்கு ஒரு ஆசனமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆட்சி நிறுவுவது தொடர்பில் இரு கூட்டணிக் கட்சிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தலுக்கு பின்னரான பாதுகாப்பு உறுதிப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)




தேர்தல் நடைபெற்ற பகுதிகளிலுள்ள சகல பொலிஸ் பிரிவுகளிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கேகாலை, அநுராதபுரம், மதவாச்சி பகுதிகளிலிருந்து சிறு முறைப்பாடுகள் பல கிடைத் துள்ளன.தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இது வரை மொத்தமாக 97 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 81 பேர் கைது செய்யப்பட்டனர்.

இத்தகைய சம்பவங்களை தடுக்குமாறும் தேர்தல் விதிகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென ஆதரவாளர்களை அறிவுறுத்துமாறும் அரசி யல் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பொலிஸார் அறி வுறுத்தியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சுமார் 20,000 பொலிஸார் மற்றும் முப்படையினர் தேர்தலின் பின்னரான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் செயற்படும் சீனக் கொள்ளைக் குழு

(கொழும்பு)

இன்டர்போல் எனப்படும் சர்வதேச காவல்துறையினரால் தேடப்பட்டு வரும் சீனக் கொள்ளை குழுவொன்று இலங்கையில் தங்கியிருந்து செயற்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மணடபத்தில் இடம்பெற்ற இரத்தினக் கல் ஆபரண கண்காட்சியில், 18 மில்லியன் பெறுமதியான இரத்தினக்கல்லை விழுங்கியவருடன் மேலும் இருபது சீனர்கள் இவ்வாறு இலங்கையில் தங்கியிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது..

இந்தக் குழு பல்வேறு நாடுகளுக்குச் சென்று, இரத்தினக் கல் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலியான இரத்தினக் கற்களை வைத்து விட்டு, உண்மையான கற்களைக் களவாடி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அண்மையில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜை மலேசியா, சிங்கப்பூர், கொரியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு சென்றுள்ளதாக இன்டர்போல் தகவல் வெளியிட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள ஏனைய சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு கண்காட்சியில் களவாடி விழுங்கிய பெறுமதி மிக்க இரத்தினக் கல் குறித்த சீனரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

# கலாசார மையத்திற்கு வரணியில் அடிக்கல் நாட்டல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதிக் கென அமைக்கப்படவுள்ள கலாசார மையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வரணி - சிட்டிபுரம் பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின (உதயன்) அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லினை சம்பிரதாய பூர்வமாக நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளரும் சாவகச்சேரி பிரதேச சபையின் எதிர்க் கட்சித தலைவருமான சூசைமுத்து அலெக்சான்டர்(சார்ள்ஸ்), பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1கோடி 20இலட்சம் ரூபா நிதிஒதுக்கீட்டில் இக் கலாசார மையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்வித் திணைக்களத்தினருக்காக இலங்கை வங்கிக்கிளை திறப்பு

(வலிகாமம்)

மாகாணக்கல்வித் திணைக்கள, வலயக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களின் நன்மை கருதி சுன்னாகம் இலங்கை வங்கி தனது கிளை ஒன்றினை மருதனார்மடத்தில் அமைந்துள்ள மாகாணக் கல்விப பணிமனையில் திறந்து வைக்கவுள்ளது.

இந்த வங்கிக் கிளைத்திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை இடம் பெறவுள்ளதாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தற்காலிகமாகத் திறக்கப் படவுள்ள இந்த வங்கிக்கிளையானது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து எதிர்காலத்தில் நிரந்தரக் கிளையாக இயங்கவுள்ளதாகவும், இந்த வங்கிக்கிளையில் கடன்வசதி தவிர்ந்த அனைத்து வங்கி நடவடிக்கைகளும் இடம் பெறவுள்ளன. காலக்கிராமத்தில் ஏ.ரி.எம். வசதியும் வழங்கப்படவுள்ளதாக முகாமையாளர் தெரிவித்துள்ளார். ஆரம்பத்திலே வாரத்தில் 3 நாட்களும், காலக்கிரமத்தில் 5 நாட்களும் இந்த வங்கிக்கிளை இயங்கவுள்ளது. (06)

## சேவை நேரம் நீடிப்பு

(வலிகாமம்)

வாடிக்கையாளரின் நன்மை கருதி சுன்னாகம் இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர் சேவை நேரத்தை அதிகரித்துள்ளது. காலை 8.30 மணி முதல் மாலை 3.00 மணிவரை இய்ங்கி வந்த வாடிக்கையாளர் சேவை கடந்த மாதம் முதல் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை இயங்கி வருகிறது.

இதன் மூலம் பல நூற்றுக் கணக்கான அரச சேவையாளர்கள் நன்மை பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இது வர்த்தகர்களின் காசோலைப் பரிமாற்ற நடவடிக்கைகளுக்கும் பேருதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (06)

# வாய்க்கால்கள் புனரமைப்பு

(பூநகரி)

உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நான்கு குளத்தை அண்டிய வாய்க்கால்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

12 ஆயிரம் மனித கூலிகளைப் பயன்படுத்தும் இவ் வேலைத் திட்டம் கமக்கார அமைப்பின் மேற்பார்வையின் கீழ் சின்னப்பல்லவராயன் கட்டில் 2125 கூலிகளையும், தின்னவேலிக்குளத்தில் 3722 கூலிகளையும், செம்பன்குன்று குளத்தில் 3089 கூலிகளையும், பண்டாரவாய்க்காலில் 2271 கூலிகளையும, செட்டித்தரை வாய்க்காலில் 2712 கூலிகளையும் பயன்படுத்தி இப்பகுதி மக்களால் வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (112)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் வலிகாம கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளருமான சி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

# உயர்தர ஆங்கிலப் பரீட்சையில் "தூங்கி விழுந்த" மாணவர்கள்

(வலிகாமம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பொது ஆங்கிலப் பாடப்பரீட்சையின் போது பரீட்சார்த்திகள் தூங்கி விழுந்த நிலையைக் காணக்கூடியதாக இருந்ததாக பரீட்சை நோக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி காலையும், மாலையும் என இருவேளைகள் ஆங்கில பொதுப்பரீட்சை நடைபெற்றது. இதில் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையிலுள்ள பரீட்சை நிலையங்களில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமான ஆங்கிலப்பரீட்சையின் போதும் மாலை 12.30 மணிக்கு ஆரம்பமான ஆங்கிலப்பாடம் பகுதி இரண்டின் போதும் மாணவர்கள் தூங்கி விழுந்தமையைக் காணமுடிந்தது.

பரீட்சார்த்திகள் 3 மணித்தியாலம் கொண்ட வினாத்தாளைப் பெற்று ஒரு மணித்தியாலயத்தினுள் விடை எழுத முடியாத நிலையில் மேசையின் மேல் தூங்கிக் கொண்டனர். எனினும் ஆங்கிலத்தை நன்கு கற்றுத் தயார்படுத்தி வந்த சில பரீட்சார்த்திகள் தங்களுக்கு வழங்கப்பட்ட 3 மணித்தியாலயங்களையும் விடை எழுதுவதற்கு செலவழித்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு பரீட்சை எழுத முடியாது தூங்கிக் கொண்டிருந்த பரீட்சார்த்திகளை பரீட்சையில் இருந்த நோக்குநர்கள் அடிக்கடி தட்டி எழுப்ப வேண்டியதாகவும் இருந்துள்ளது. இத்தகைய பரீட்சாத்திகளை நோக்கும் போது இவர்கள் ஆங்கிலப் பாடத்தில் ஆர்வமின்மையும் போதிய பாட அறிவு இன்மையும் காணப்பட்டதை அவதானிக்க முடிந்துள்ளது என பரீட்சைக் கடைமையில் இருந்துள்ள ஆங்கில பாட ஆசிரியர்கள் ஒருவர் தெரிவித்துள்ளார். (06)



புலோலி ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கலை மன்றத்தில் நடைபெற்ற போது கலை மன்ற பிரதிநிதியான திருமதி யோகரஞ்சிதத்திற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரியரட்ணம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனைக் காணலாம் (62)

## தேசிய மட்டத்திற்குத் தெரிவு

(பூநகரி)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டியில் பூநகரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இருவர் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாச்சிக்குடா மு.த.க.பாடசாலையைச் சேர்ந்த வி.லோஜினி கவிதைப் போட்டியிலும், திறந்த பிரிவு நாட்டார் கலைப் போட்டியில் செ.தர்மிகாவும் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளதாக பூநகரிப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார். (112)

# முரசின் இன்றைய பலன்

(11.09.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 26 ஆம் திகதி.
நட்சத்திரம் புனர்பூசம் பின்னிரவு 2.39 வரை.
சித்தம். திதி தசமி முற்பகல் 9.27 வரை, பின் ஏகாதசி.
இராகுகாலம் 3.03 - 4.33 வரை. சுபநேரம் 10.33 - 12.03 வரை.
எமகண்டம் 9.03 - 12.33 வரை, குளிகன் காலம் 12.03 - 1.33 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | திறமையை காட்டுவீர்கள். நண்பர், உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில் அபிவிருத்தி. ஆதாய பணவரவு. புத்திரரின் படிப்புக்கு உதவி. அரசு உதவி. |
| ரிஷபம் | எண்ணத்திலும், செயலிலும் உற்சாகம். பிறர் நலன் கருதுவீர்கள். தொழில் முன்னேற்றம் பெறும். உறவினர்கள், நண்பர்களிடம் ஒத்துழைப்பு. |
| மிதுனம் | நிதான செயலே நன்மை தரும். எவருடனும் சச்சரவு கூடாது. வேலைப்பளு அதிகரிக்கும். பணவரவில் மந்தம். போட்டி இருக்கும். செலவு. |
| கடகம் | புதிய சிந்தனை. தொழிலில் கூடுதல் கவனம். தாராள பணவரவு. உறவினரிடம் செல்வாக்கு. புதிய இடங்கள் செல்ல, புதிய பொருட்கள் வாங்க ஆர்வம். |
| சிம்மம் | நண்பர்களால் நன்மை. தியாக மனது. தொழிலில் வளர்ச்சி. சேமிக்கப் பலன். உடல் ஆரோக்கியம் பெறும். விருந்து உபசரிப்பு. பாராட்டு குவியும். |
| கன்னி | மனதில் குழப்பம். அறிமுகம் இல்லாத இடத்தில் நுழைய வேண்டாம். பணவரவு குறைவு. போட்டி வேண்டாம். ஒற்றுமை நாடுக. பயண வாய்ப்பு. |
| துலாம் | மகிழ்ச்சியான செய்தி வரும். தொழிலில் மாற்றம். சேமிப்பு அதிகரிக்கும். ஓய்வு கிடைக்கும். குடும்ப உறவுகள் உதவும். இன்பமான நாள். |
| விருச்சிகம் | உங்களை விமர்சித்தவர்கள் புகழ்வர். புதிய மூலதனம் கிடைக்கும். வரவைப் போலவே செலவும் அதிகரிக்கும். பயணத்தில் மாறுதல். நட்பால் உதவி. |
| தனுசு | பொறுமையால் நன்னிலை ஏற்படும். தொழில் குழப்பம் தீரும். உடல் நலத்தில் கவனம் அவசியம். குடும்பத்தின் அனுசரணை, மன அமைதி உண்டாகும். |
| மகரம் | அனுபவசாலிகளின் ஆலோசனை உதவும். வெற்றி கிடைக்கும். கூடுதல் உழைப்பு. தடைகள் விலகும். வரவை விட செலவு அதிகம். வாகன அவதானம். |
| கும்பம் | புகழ் கிடைக்கும். பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சியில் சாதனை. பணவரவு. குடும்பத்தேவைகள் தீரும். அறப்பணிகளில் ஈடுபாடு. தாயின் ஆசி. |
| மீனம் | புதிய நம்பிக்கை ஏற்படும். மாற்றாரிடமும் மதிப்பு. தொழில் வளம்பெறும். ஆதாய பணவரவு. வழக்கு வெற்றி. குடும்பச் சிக்கல் விலகும். கடன் தீரும். |

# முரளி நல்லிணக்க ருவென்ரி – 20 கிரிக்கெட்
# ஹட்ரிக் வெற்றியுடன் அரையிறுதியில் யாழ். மாவட்டம்

(யாழ்ப்பாணம்)

ஹட்ரிக் வெற்றியுடன் முரளி நல்லிணக்க ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட அணி தகுதிபெற்றுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை, குட்னஸ் நிதியம், ரெட் டொட்ஸ், மஹேல நிதியம், பிறை எமரட்ஸ் ஆகியவற்றின் அனுசரணையுடன் தேசிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் முரளி நல்லிணக்க ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் நேற்றைய மூன்றாம் நாளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில் முதல் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியும், மன்னார், வவுனியா இணை அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மாவட்ட அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனதாஸ் இரு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஆதித்தன் 24, கிளிங்ரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனராஜ், தயாபரன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வவுனியா, மன்னார் இணை அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் யதுசன் மட்டும் பொறுப்பாக ஆடி 53 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஜனதாஸ், கோகுலன், எரிக் பிரதாப் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். சகலதுறை யிலும் ஜொலித்த யாழ். மாவட்ட அணி வீரர் ஜனதாஸ் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இதன்மூலம் யாழ். மாவட்ட அணி ஹட்ரிக் வெற்றிபெற்றதுடன் அரையிறுதி ஆட்டத்திற்கும் தகுதிபெற்றுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும் அரையிறுதிப் போட்டியில்யாழ். மாவட்ட அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# சமநிலையான கால்பந்தாட்டம்

சேர்பியா, ஸ்கொட்லாந்து அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ணக் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டி கோல் எதுவுமின்றி சமநிலையானது.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில் வரும் 2014ஆம் ஆண்டு பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோ நகரில் 20ஆவது உலக கோப்பை கால்பந்து தொடர் நடக்க உள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கிறது. ஐரோப்பிய அணிகளுக்கான தகுதிச் சுற்றில் இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 53 அணிகள் பங்கேற்கின்றன.

ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் சேர்பியா, ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி, ஆட்டநேர முடிவில் 0-0 என சமநிலையானது.

# ரஷ்ய வீராங்கனை சாதனை



(லண்டன்)

ரஷ்ய வீராங்கனை ஆக்சானா சாவ்சென்கோ இன்கிரிடிடுலஸ் பராலிம்பிக்கில் 5 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். 400 மீற்றர் நீச்சல் போட்டியில் கலந்துக் கொள்ள வேண்டாம் என்று தன்னை பயிற்சியாளர் தடுத்ததாக அவர் கூறியுள்ளார்.

21 வயதான ஆக்சானா சாவ்சென்கோ, 50 மீற்றர் ப்ரீ ஸ்டைல், 100 மீற்றர் பேக் ஸ்ட்ரோக், ப்ரீ ஸ்டைல், 400 மீற்றர் ப்ரீ ஸ்டைல், தனிநபர் 200 மீற்றர் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களை வென்று ஒரே பராலிம்பிக்கில் 5 தங்கம் வென்ற சாதனைப் பெண் என்ற பெருமையை சாவ்சென்கோ பெற்றுள்ளார். இவரது சாதனை மூலம் ரஷ்யா, 32 தங்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 3ஆவது இடம் பிடித்துள்ளது.

சாதனை குறித்து சாவ்சென்கோவிடம் கேட்டபோது, ஒரே போட்டியில் 5 தங்கம் வெல்ல முடியும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. 400 மீற்றர் போட்டியில் கலந்துக் கொள்ளக்கூடாது என்று என் மேல் உள்ள அக்கறையில் பயிற்சியாளர் தடுத்தார். ஆனால், அவரைச்சமாதானப் படுத்தி போட்டியில் கலந்துக் கொண்டு தங்கம் வென்றேன் என்றார்.

# பரா ஒலிம்பிக் பதக்கம் குவித்து முதலிடம் பிடித்தது சீனா



லண்டனில் நடந்த பராலிம்பிக்கில் சீனா 231 பதக்கங்களை குவித்து முதலிடத்தை பிடித்தது.

மாற்றுத் திறனாளிகளுக்கான 14ஆவது பரா ஒலிம்பிக் விளையாட்டு போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை நடைபெற்றது. இதில் 164 நாடுகளை சேர்ந்த 4,294 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். மொத்தம் 20 விளையாட்டுகளில் 503 பிரிவுகளில் பந்தயங்கள் நடந்தன.


சாதனைக்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் வீரர், வீராங்கனைகள் ஒவ்வொருவரும் உற்சாகமாக கலந்து கொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்தி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினர். 282 பேரை களம் இறங்கிய சீனாவே இந்த முறையும் ஆதிக்கம் செலுத்தியது. அவர்களின் பதக்க வேட்டையை எந்த நாட்டவராலும் நெருங்க முடியவில்லை.

பாராஒலிம்பிக் போட்டி கண்கவர் கலைநிகழ்ச்சி, வாண வேடிக்கைகளுடன் நேற்று முன்தினம் கோலாகலமாக நிறைவடைந்தது. பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த சீனா 95 தங்கம், 71 வெள்ளி, 65 வெண்கலம் என்று மொத்தம் 231 பதக்கங்களைக் குவித்தது. இதன் மூலம் கடந்த 2008ஆம் ஆண்டு பீஜிங் பராஒலிம்பிக்கில் 89 தங்கம் உள்பட 211 பதக்கங்கள் பெற்ற தங்களது முந்தைய சாதனையை முறியடித்தது.

ரஷ்யா 36 தங்கம் உள்பட 102 பதக்கத்துடன் 2ஆவது இடத்தையும், இங்கிலாந்து 34 தங்கம் உள்பட 120 பதக்கத்துடன் 3ஆவது இடத்தையும் பெற்றன.

பிரதான ஒலிம்பிக்கில் முதலிடம் பிடித்த அமெரிக்கா 31 தங்கம், 29 வெள்ளி, 38 வெண்கலம் என்று 98 பதக்கத்துடன் 6ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டது.

# தடை தாண்டலில் புதிய உலக சாதனை



அமெரிக்க தடைதாண்டல் ஒலிம்பிக் சம்பியன் அரிஸ் மெர்ரிட் ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டி போட்டியில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

பெல்ஜியத்தில் நடைபெற்ற டையமன்ட் லீக் போட்டியின் 110 மீற்றர் தடைதாண்டி இறுதி போட்டியிலேயே அவர் புதிய உலக சாதனை படைத்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்தப் போட்டியை அரிஸ் மெர்ரிட் 12.80 வினாடிகளில் முடித்தார். முன்னர் கியூபா நாட்டு வீரர் டெய்ரோன் ரொபல்ஸ் போட்டித் தூரத்தை 12.87 வினாடிகளில் முடித்ததே சாதனையாக இருந்தது.

# நடுவர் குழாம் அறிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள ருவென்ரி -20 உலகக் கிண்ண போட்டியின் ஆரம்ப சுற்றில் பங்கேற்கும் நடுவர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் விபரத்தை சர்வதேச கிரிக்கெட் சபை. (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

இதன்படி இந்த போட்டிக்காக மத்தியஸ்தர்களாக இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல, நியூசிலாந்தின் ஜெப் கிரோ மற்றும் ஐ.சி.சி. பிராந்திய மத்தியஸ்த குழுவைச் சேர்ந்த கிராம் லா பூரி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். எனினும் இலங்கையில் பூரி எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் மற்றும் 23ஆம் திகதி பல்லேகலவில் நடைபெறவுள்ள போட்டியில் மாத்திரமே ஆண்கள் பிரிவில் மத்தியஸ்தம் வகிக்கவுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர் காலி சென்று மகளிர் இருபது -20 போட்டியில் மத்தியஸ்தராகப் பணிபுரியவுள்ளார்.

அதேபோன்று ருவென்ரி-20 உலகக் கிண்ண போட்டிக்கு கள நடுவர்களாக 12 பேர் செயற்படவுள் ளனர். அவர்கள் பில்லி பவ்டன், அலீம் தார், ஸ்டிவ் டேவிஸ், தர்மசேன, மராய்ஸ் எராமுஸ், இயன் கவ்ல்ட், டொனி ஹில், ரிச்சட் கட்டர் பிரோ, நிகல் பொங், ஆசாத் ரவ்ப், சைமன் டவ்பல் மற்றும் ரொட் டியுகர் ஆவர்.

# பதவி விலக வேண்டுமெனில் தரவேண்டும் நஷ்டஈடு

(ஜோகன்னஸ்பர்க்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையில் இருந்து பதவி விலக வேண்டும் என்றால், தனக்கு ரூபா 2.69 கோடி நஷ்டஈடு தர வேண்டும் என்று அதன் தலைமை நிர்வாக அதிகாரி ஜெரால்ட் மஜோலா கூறியுள்ளார். கடந்த 2009இல் மக்களவைத் தேர்தல் நேரத்தில், ஐ.பி.எல்.2 சீசன் போட்டி வந்தது. இதற்கு பாதுகாப்பு அளிக்க முடியாது என்று பல்வேறு மாநிலங்களும் பின்வாங்கிய நிலையில், போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டன.

அப்போதும், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தலைமை நிர்வாக அதிகாரியாக ஜெரால்ட் மஜோலா இருந்தார். ஐ.பி.எல். போட்டியை கணக் கில்காட்டி, தனக்கும், சபையில் உள்ள மற்ற ஊழியர்களுக்கும் பெருமளவில் ஊக்குவிப்பு போட்டுக் கொடுத்தார்.

இது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்நிலையில், தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் பிகைல் பாலூலா, இதுகுறித்து விசாரணை நடத்துவதற்காக நிகோல்சன் என்பவர் தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்தார்.

இக்குழு தன்னுடைய பரிந்துரையை வெளியிட்டுள்ளது. அதில், முறைகேடாக மஜோலா மேலதிக சலுகைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஒழுங்கு விதியை மீறி செயற்பட்டுள்ள அவர் மீது நடவடிக்கை எடுப்பதுடன், ஊக்குவிப்பாகக் கொடுத்த பணத்தையும் திரும்பபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஊக்குவிப்பு அளித்த பிரச்சினைக்காகவே தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் துது ஜெலி நோகா, இரண்டு முறை பதவியில் இருந்து நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, சபையின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியில் இருந்து விலக வேண்டும் என்றால், தனக்கு ரூபா 2.69 கோடி நஷ்டஈடு தர வேண்டும் என்று மஜோலா தெரிவித்துள்ளார். இதை அவரது வழக்கறிஞர் புமெஜோ டேவிட் பத்திரிகைகளுக்கு தெரிவித்துள்ளார்.

# செரீனா வசம் கிண்ணம்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கிண்ணம் வென்றார். இதன் மூலம் 30ஆவது வயதில் அமெரிக்க ஓப்பனைக் கைப்பற்றி இரண்டாவது வீராங்கனை என்ற சிறப்பையும் செரீனா பெற்றுக்கொண்டார்.

கிராண்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நியூயோர்கில் நடைபெற்றது. இதில் செரீனா வில்லியம், விக்டோரியா அசரென்கா ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இவ் இறுதிப் போட்டி 138 நிமிடங்கள் வரை நீடித்தது. இதில் 6–2, 2–6, 7–5 என்ற செட் கணக்கில் செரீனா வில்லியம் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் மூலம் நான்காவது முறையாக அமெரிக்க ஓப்பன் கிண்ணத்தை இவர் கைப்பற்றியுள்ளார்.

இதற்கு முன்னர் 1999, 2002, 2008ஆம் ஆண்டு அமெரிக்க ஓப்பன் பட்டத்தை இவர் கைப்பற்றியுள்ளார். 30 வயதான செரீனாவின் 15ஆவது கிராண்ஸ்லாம் கிண்ணமாக இது அமைந்தது.

இதேவேளை, 30 வயதில் அமெரிக்க ஓப் பன் பட்டத்தை வென்ற இரண்டாவது வீராங்கனை என்ற சிறப்பையும் அவர் பெற்றார். இதற்கு முன்னார் 1987 ஆம் ஆண்டு மார்டின் நவரடி–லோவா தன்து 30ஆவது வயதில் அமெரிக்க ஓப்பனை வெற்ற முதல் வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றிருந்தார்.

விம்பிள்ஸ் கிண்ணம், லண்டன் ஒலிம்பிக் தங்கம், அமெரிக்க ஓப்பன் கிண்ணம் என இந்த ஆண்டுசெரீனாவின்வெற்றி வேட்டைகள் தொடர்ந்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது.








முரளி நல்லிணக்க ருவென்ரி −20 கிரிக்கெட் தொடரின் ஆரம்ப நிகழ்வின்போது புனரமைக்கப்பட்ட ஒட்டுசுட்டான் மகாவித்தியால மைதானம் சங்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தனா ஆகியோரால் திறந்து வைக்கப்படுவதையும், முல்லைத்தீவு மாவட்ட அணிக்கு குமார் சங்கக்கார கிரிக்கெட் தொடர்பான நுணுக்கத்தை விளக்குவதையும் காணலாம்.

# இணைந்த கரங்களாக சாதனை படைப்போம் நாட்டுக்குப் பெருமையை தேடிக்கொடுப்போம்

## ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் சங்கக்கார தெரிவிப்பு

(ஒட்டுசுட்டான்)

இலங்கை நாட்டுக்காக நீங்கள் பல சாதனைகளைப் புரிய வேண்டும் என்பதே எனது பெரு விருப்பம். அந்த வகையில் இந்த மைதானத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி அடுத்த நிலையை நோக்கி விரைவாக நகரவேண்டும் என இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

முரளி நல்லிணக்க வெற்றிக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் ஆரம்ப விழா ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய குமார் சங்கக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கிலாந்து நிறுவனத்தின் அனுசரணையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானம் புனரமைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட மைதானத்திதை குமார் சங்கக்கார மற்றும் இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா ஆகிய இருவரும் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தனா ஆகியோர் உரையாற்றினர். இதில் குமார் சங்கக்கார தனது உரையில், இங் கிலாந்து நிறுவனத்தின் அனுசரணையின் மூலம் இந்த மைதானம் புனரமைக்கப்பட்டு உங்களிடம் இன்று கையளிக்கப்பட்டதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இனி இந்த மைதானதம் உங்களுக்குச் சொந்தமானது. இதை நீங்கள் உரிய முறையில் பயன்படுத்தி உங்களை திறமைகளை வெளிப்படுத்தி உரிய பலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விளையாட்டின் மூலமாகவே ஒரு நாட்டை ஒன்றிணைக்க முடியும் என நான் கருதுகின்றேன். நாம் விளையாட்டின் மூலம் ஒன்றிணைவதன் மூலம் பல சாதனைகளைப் படைத்து நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுக்கும் அதேவேளை, நாமும் ஒன்றுபட்டு செயற்பட அது துணைபுரியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த வகையில் இலங்கை நாட்டுக்காக நீங்கள் பல சாதனைகளைப் புரியவேண்டும். விளையாட்டின் மூலம் எமது நாடு மிளிரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, மஹேல ஜெயவர்த்தனா தெரிவிக்கையில், நீங்கள் பயமின்றி விளையாடவேண்டும். உங்களிடம் நல்ல திறமை இருக்கின்றது. அதனை உரிய முறையில் வெளிப்படுத்தி நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

## சதங்களால் பெருமை

(கொல்கத்தா)

என்னைப் பெருண்மப்படுத்துவது நான் அடித்த சதங்களே என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்தார்..

வாழ்க்கையில் நாம் எல்லோரும் தவறு செய்கிறோம். என்னைப் பொறுத்த வரை அந்த தவறுகளுக்காக நான் மகிழ்ச்சி அடைவதில்லை. அதுபோன்றுதான், லோர்ட்ஸ் கிரிக்கெட்டின் போது நான் சட்டையை கழ்ற்றிய காட்சியை தொலைக்காட்சியில் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியோ, உற்சாகமோ இருப்பதில்லை. நான் நிறைய சதங்கள் அடித்துள்ளேன். அவைதான் என்னை பெருமைப்படுத்தின என்றார்.

## தொடர் பாக். வசம்

(டுபாய்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி −20 போட்டியில் சூப்பர் ஓவரில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், அவுஸ்ரேலிய அணிக்குமிடையிலான 2ஆவது ருவென்ரி போட்டி டுபாய் சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் நசீர் ஜம்ஷெத் 36 பந்துகளில் 45 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 42 பந்துகளில் 45 ஓட்டங்களையும், கம்ரன் அக்மல் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

20 ஓவர்களில் 152 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றதால் ஓட்டங்கள் சமநிலையில் காணப்பட்டன.

இதில் ஜோர்ஜ் பெய்லி 27 பந்துகளில் 42 ஓட்டங்களையும், ஷேன் வடசன் 28 பந்துகளில் 33 ஓட்டங்களையும், டேவிட் வோனர் 19 பந்துகளில் 31 ஓட்டங்களையும், மைக் ஹசி 27 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சயீட் அஜ்மல் 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அப்துல் ரஷாக் ஓர் ஓவரில் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள, பாகிஸ்தான் அணி இறுதிப்பந்தில் அந்த ஓட்ட எண்ணிக்கையைக் கடந்தது.

போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் சயீட் அஜ்மல் தெரிவானார்.

# அளவெட்டி மத்தியின் மென்பந்து கிரிக்கெட் அரையிறுதிப் போட்டியில் றோயல் அணி

(அளவெட்டி)

அளவெட்டி மத்தியவிளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு றோயல் அணி தகுதி பெற்றுள்ளது.

வடமாகாண மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் முதல் நாள் நிறைவில் வெற்றி பெற்ற அணிகளின் விபரம் வருமாறு:

போட்டியின் முதலாவது போட்டியாக றொக்கெற் அணிக்கும் பயர்பொக்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பயர்பொக்ஸ் 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 76 ஓட்டங்களைப்பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றொக்கெற் 7 விக்கெட்டை இழந்து 51 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் 25 ஓட்டங்களால் பயர்பொக்ஸ் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டி ஸ்ரீமுருகன் அணிக்கும் இணுவில் கலைஒளி அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி 8 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 66 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் 6 விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களை பெற்று வெற்றிபெற்றது.

மூன்றாவது போட்டியில் முத்துத்தம்பி அணிக்கும் காந்திஜீ அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய முத்துத்தம்பி 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 33 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காந்திஜீ 1 விக்கெட்டை இழந்து 34 ஓட்டங்களை பெற்று வெற்றிபெற்றது.

நான்காவது போட்டி நியூவோரியர்ஸ் அணிக்கும் றோயல் அணிக்கும் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் 8 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூவோரியர்ஸ் 7 விக்கெட்டை இழந்து 43 ஓட்டங்களை பெற்றதனால் றோயல் அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது போட்டியில் மல்லாகம் ஆர்.டி.எஸ் அணிக்கும் உடுவில் சலஞ்சர்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் சலஞ்சர்ஸ் 8 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆர்.டி.எஸ் 3 விக்கெட்டை இழந்து 68 ஓட்டங்களை பெற்று வெற்றிபெற்றது.

ஆறாவது போட்டியில் றோயல் அணியும் காந்திஜீ அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் 8 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து 94 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காந்திஜீ 6 விக்கெட்டை இழந்து 43 ஓட்டங்களை பெற்றதனால் றோயல் அணி 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் காலிறுதிப் போட்டிக்கு றோயல் அணி தகுதி பெற்றது.

ஏழாவது போட்டியில் ஸ்ரீமுருகன் அணியும் மல்லாகம் ஆர்.டி.எஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 88 ஓட்டங்களைப்பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆர்.டி.எஸ் 7 விக்கெட்டை இழந்து 11 ஓட்டங்களை பெற்றதனால் ஸ்ரீமுருகன் அணி 77 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

எட்டாவது போட்டியில் ஸ்ரீமுருகன் அணியும் பயர்பொக்ஸ் அணியும் மோதின.முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 59 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பயர்பொக்ஸ் 7 விக்கெட்டை இழந்து 11 ஓட்டங்களை பெற்றதனால் ஸ்ரீமுருகன் அணி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலாவது காலிறுதிப்போட்டியில் றோயல் அணியும் ஸ்ரீமுருகன் அணியும் பலப்பரீட்சை நடாத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 44 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் 3 விக்கெட்டை இழந்து 45 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்று அரையிறுதிக்குத்தகுதிபெற்றது. (93)

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சீன விரோதக் கூச்சல் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது!

அண்மையில் சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த நேரத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சீனாவைத் தாக்கி மிகவும் அவதூறான அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார். சீனா இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகள் வடக்கு கிழக்கில் சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழர்களை அழிக்கும் நோக்குடையவை என்றும், சீனா ஏற்கனவே தனது திபெத் மாகாணத்தில்

**- சின்னக்குட்டி கட்டுரையிலிருந்து.**


சீனர்களைக் குடியேற்றி திபெத்தியர்களை அழித்து வருகிறது என்றும் வேறு குற்றப்பட்டியல் வாசித்திருக்கிறார்.

சுரேஸ் பிரேமச்சந்திரனின் அறிக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வமான அறிக்கையா அல்லது பல விடயங்களில் அவர் கூட்டமைப்பின் தலைமையின் அங்கீகாரமின்றி கடந்த காலங்களில் விடுத்த அறிக்கை போன்ற ஒன்றா என்பது தெரியவில்லை. அதைக் கூட்டமைப்புத் தலைமைதான் தெளிவுபடுத்த வேண்டும். (கடந்த காலங்களில் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த பல தாறுமாறான அறிக்கைகள், கூட்டமைப்பின் அனுமதியில்லாதவை என்றும், அதுபற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லிப் புழுங்கியதாகவும் கூறப்படுகிறது. அதனால்தான் சுரேஸின் கொட்டத்தை அடக்க சிறீதரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் அணியை சம்பந்தன் தமிழ் கூட்டமைப்புக்குள் இழுக்க முயற்சிக்கிறார் என்ற கருத்தும் உண்டு.

சுரேஸின் தனிப்பட்ட குணாம்சங்கள் பற்றியோ, கடந்த காலங்களில் அவர் ஒரே நேரத்தில்கூட எதிரும் புதிருமான பலரின் ஏஜண்டாக எப்படி வேலை செய்தார் என்பதைப் பற்றியோ விவாதிப்பது அல்ல இச்சிறு குறிப்பின் நோக்கம். அவரது விசமத்தனமான சீன எதிர்ப்புப் பிரசாரத்தின் உள்நோக்கத்தையும், அதனால் எழும் விபரீதத்தையும் சுட்டிக்காட்டுவதே இதன் நோக்கம்.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எப்படி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இரண்டாயிரம் வருடங்களுக்கும் முற்பட்டதோ, அதுபோன்றதுதான் சீனாவுடனான உறவும். சுதந்திரத்துக்குப் பிறகு அவ்வுறவு இரு நாட்டு அரசுகளாலும், மக்களாலும் மேலும் சிறந்த முறையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம், காலனித்துவம் என்பனவற்றுக்கு எதிரான போராட்டத்தில் இரு நாடுகளும் ஒன்றை ஒன்று பரஸ்பரம் ஆதரித்து வந்துள்ளன இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிய போதெல்லாம் சீனா தன்னலம் கருதாது உதவி வந்துள்ளது.

அதேபோல, சீனா ஐக்கிய நாடுகள் சபையில் தனது சட்டபூர்வ உரிமையை வென்றெடுப்பதற்கும், ஒரு சீனா என்ற கொள்கையை நிலை நாட்டுவதிலும் இலங்கை சீனாவுக்கு உதவி வந்துள்ளது. இலங்கையில் புலிகளை முறியடிப்பதிலும், இந்தியா போலவே சீனாவும் இலங்கைக்கு பாரிய உதவிகளைச் செய்துள்ளது. இலங்கையுடனான சீனாவின் உறவும் சரி, இந்தியாவின் உறவும் சரி பல்துறை சார்ந்தது. அதில் இராணுவ உதவிகளும் அடங்கும். சீனா தான் வழங்கும் உதவிகளை இப்படி இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என எந்தவொரு நாட்டுக்கும் நிபந்தனை போடுவதில்லை. அதுமட்டுமின்றி, சீனாவின் எதிரி நாடுகள் என வர்ணிக்கப்படும் அமெரிக்கா, இந்தியாவுடன் கூட, சீனாவுக்கு இராணுவ ஒத்துழைப்புகள் உண்டு. இன்றைய உலக ஒழுங்கில் இவை தவிர்க்க முடியாதவை.





சுரேஸின் திபெத் பற்றிய கற்றுக்குட்டித்தனமான கூற்றும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சுரேஸ் ஒரு காலத்தில் சோசலிசம் பேசினாலும், இப்பொழுது அவருக்கு இனிப்பானது மேற்கத்தைய ஏகாதிபத்திய முதலாளித்துவ முறைமையும், தமிழ் இனவாதமும்தான். ஏனெனில் அவை இரண்டும்தான் அவரைப் பிழைக்க வைத்துக்கொண்டு இருக்கின்றன. சுரேஸ் மட்டுமின்றி, இலங்கையில் உருவான சகல தமிழ்த் தலைமைகளும் கம்யூனிசத்துக்கு எதிரானவைதான். ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் என எல்லாத் தலைவர்களும் கம்யூனிசத்துக்கும் சீனா, சோவியத்யூனியன் போன்ற சோசலிச நாடுகளுக்கும் எதிராக இருந்தவர்கள்தான்.

இலங்கைத் தமிழ் தலைமைகளின் சோசலிச விரோதப் போக்குடன் ஒப்பிடுகையில் தமிழகத்தின் தலைவர்களின் நிலை பரவாயில்லை. கலைஞர் மு.கருணாநிதி தனது இளமைக்காலத்தில் சோவியத் தலைவர் ஸ்டாலின் அவர்கள்பால் ஏற்பட்ட ஆகர்சிப்பால் தனது மகனுக்கு "ஸ்டாலின்" எனப் பெயர் சூட்டினார். ஈ.வெ.ரா.பெரியார் ஸ்டாலின் காலத்து சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்து அங்குள்ள அரசியல் அமைப்பையும், வாழ்க்கை முறைமையையும் பார்த்துவிட்டு இந்தியா திரும்பி அது பற்றி மிகவும் சிலாகித்துப் பேசினார். இந்தியாவிலுள்ள பல்வேறு கட்சிகள் சீனாவுக்கு விரோதமாக இருந்தாலும், சோசலிச அமைப்பைக் குறை கூறுவதில்லை.


இலங்கைத் தமிழ்த் தலைமைகள் மட்டும்தான் அன்றும் இன்றும் மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளுக்குத் துதி பாடுபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்த மேற்கு நாடுகள்கூட இன்று சீனாவின் வளர்ச்சியை பொறாமையுடன் ஏற்றுக்கொள்வதுடன், அதனுடன் உறவுகளைப் பேணவும் ஆவலுடன் இருக்கிறன. ஆனால் சுரேஸ் போன்ற கற்றுக்குட்டிகளுக்குத்தான் புரியவில்லை. அது புரியாவிட்டாலும் பரவாயில்லை, உலகின் மிகச் சக்திவாய்ந்த, இன்னும் சில வருடங்களில் அமெரிக்காவையே விஞ்சப்போகிற ஒரு புகழ்பூத்த நாட்டைப் பற்றி அவதூறாகப் பேசி, இலங்கைத் தமிழ் மக்களுக்கு எவ்வள[illegible] விபரீதங்களைக் கொண்டு வரப்போகிறார்கள் என்பதை நினைக்கும்போதுதான் கவலையளிக்கிறது.


ஏற்கனவே இந்தியாவுடனான உறவைக் கெடுத்துக் கொண்டாயிற்று. இப்பொழுது சீனாவுடன் சொறிய ஆரம்பித்திருக்கிறார்கள். இது அவ்வளவுக்கு நல்லதல்ல. சம்பந்தன் போன்ற மூத்த தலைவர்கள், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்களின் கவைக்குதவாத "கலரி"ப் பேச்சுகளைக் கட்டுப்படுத்துவது அவசியம். சீனா பற்றிய சுரேஸின் அவதூறுக்கு சம்பந்தனும் அவரது கூட்டமைப்புத் தலைமையும் பிராயச்சித்தம் செய்வது அவசியத்திலும் அவசியம்.

**(வானவில்-20)**




▌ சீனப் பெருஞ்சுவர் கி.மு. 200 - 206 இற்கும் இடைப்பட்ட காலத்தில் முன் - உஷி-குவாய் மன்னனால் கட்டப்பட்டது. சுமார் 8000 கி.மீ. நீளம். மங்கோலியப் படையெடுப்பைத் தடுப்பதற்காகவும், சீன அரசர்கள் தங்களுடைய எல்லைகளைப் பாதுகாப்பதற்காகவும் கட்டப்பட்டதாகும். படிகள் மிக உயரமாகவும் சில இடங்களில் படிகளே இல்லாமலும் வெறும் தரைத் தளமாகக் காட்சியளிக்கிறது. வளைந்து வளைந்து பல பிரிவுகளாகத் தென்படுகிறது.





▌ 2008ஆம் ஆண்டு நடந்த அந்த "பறவைக்கூடு" புகழ் ஒலிம்பிக் ஸ்டேடியத்தை வீணடிக்காமல் அப்படியே சுற்றுலாத்தலமாக மாற்றியிருக்கிறார்கள்.


▌ சீனாவில் அவசியம் பார்க்க வேண்டிய மற்றொன்று, அதிவேக ரயில் என்று சொல்லக்கூடிய புல்லட் தொடர் வண்டி. இது புறப்படும் பெய்ஜிங் ரயில் நிலையமே விமான நிலையங்களை விட பெரியதாகவும் அழகாகவும் இருக்கிறது. பெய்ஜிங்கிலிருந்து ஷங்காய் 1350 கி.மீ. தூரத்தை நாலரை மணி நேரத்தில் சென்றடைந்து விடுகிறது. மணிக்கு 330 கி.மீ. வேகத்தில் செல்கிறது. தரையில் படாமல் மிதந்து பறக்கும் காந்தத்தினால் இயங்கும் ரயில் வண்டியும் உண்டு. அதன் வேகம் மணிக்கு 431 கி.மீ.


▌ சீனாவில் பொட்டல் காடாகவோ தரிசாகவோ நிலங்களைக் காணமுடிவது அரிது. பச்சைப்பசேலென்று விவசாய நிலங்கள்தாம். நிலக்கடலை, மக்காச்சோளம், நெல் போன்றவை அதிகம் பயிர் செய்யப்படுகிறது. விவசாயம் பெரும்பாலும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் நேரான சாலைகள் மற்றும் கால்வாய்கள். ஓட்டு வீடுகள் எல்லா வீடுகளிலும் சோலார் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.


▌ ஷங்காய் நகரம் வியப்பின் சிகரம். 4 வழிச்சாலைகளிலிருந்து 10 வழிச் சாலைகள்வரை அங்கு சர்வசாதாரணம். அச்சாலைகளின் இருபக்கமும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு என தனிப்பாதைகள். அதற்குப் பக்கத்தில் நடைபாதை. இருபக்கமும் பசுமையான மரங்கள், பூங்காக்கள். நியூயோர்க், சிங்கப்பூர், துபாய் போன்ற நகரக் கட்டடங்களைத் தோற்கடிக்கும் வகையில் எங்கு பார்த்தாலும் உயரமான கட்டடங்கள் பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாகும். ஓரியண்டல் டவர் (468 மீற்றர் உயரம்) உலகின் மூன்றாவது உயரமான கட்டடமாகும்.

▌ புத்த மதம் மக்களின் பிரதான மதம். நிறைய புத்த கோயில்கள் உள்ளன. "ஜூட் புத்தா" கோயில் பிரபலம்.

▌ அகலமான நேரான சுத்தமான சாலைகள். எங்கும் குப்பைகளையோ சாக்கடைகளையோ பார்க்க முடியாது. சுத்தமான பொது கழிவறைகள். காவல் துறையினர் தென்பட மாட்டார்கள். விபத்து நேர்ந்தால்தான் வருவார்களாம். பட்டுப்போன மரங்களைக்கூட உடன் அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் அதே அளவுள்ள மரத்தை நட்டு தளைக்க வைத்துவிடுகிறார்கள். அசிங்கமான சுவர் விளம்பரங்களோ, பானர்களோ தலைவர்களின் சிலைகளோ கொடிக் கம்பங்களோ இல்லாத நாடென்பதே ஆசியாவின் அதிசயம்தான்!







# சிகரெட் வரலாறு!

இளைஞர்கள் முதல், கிழங்கள் வரை நண்பனாகத் திகழும் சிகரெட், 19ஆம் நுற்றாண்டில் தான் முதன் முதலில் தயாரிக்கப்பட்டதாம். அமெரிக்க செவ்விந்தியர்கள் புகையிலைச் செடிகளை எரித்து, சுற்றிலும் இருந்து புகையை நுகர்ந்தனராம்.

இவர்களே காலப் போக்கில் வெள்ளியாலும், களிமண்ணாலும், மரக்கட்டையாலும் செய்யப்பட்ட குழாய்களில், புகையிலையை அடைத்துப் புகைக்கத் தொடங்கினர்.

பிறகு, சுருட்டு என்னும் வடிவம் தோன்றிற்று. இங்கிலாந்தில் கைத்தொழிலாக இருந்த சுருட்டு, காலமாற்றத்தால் இயந்திரத் தொழிலாக மாறியது. [illegible]தகைய வளர்ச்சித் திட்டத்தின் உச்சநிலையாக, காகிதத்தால் சுற்றி சிகரெட் செய்யப்பட்டது. அப்பொழுது அதன் திருநாமம் பிரேசிலில், "பாபிசிட்டோஸ்" எனப்பட்டது.

இன்றைய வளர்ச்சியடைந்த சிகரெட் வடிவம் கி.பி. 1855 இல் இங்கிலாந்தில் உருவானது.

காண்பதற்கு சிகரெட் சிறியதாக இருந்தாலும், இதன் உடல் பகுதியில் 270 வகையான இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளன.

அவற்றில் சில: நிக்கோடின் பர்பரோஸ், கார்பனீரொக்சைட், ஓர்செனிக், பிரஸ்லிக் அமிலம், மெதேன், போர்மிக் அமிலம், கோலிடைன், பைரடின், கிரிசோல், பைரான், ரூபிடின், போர்மோலின், பிரிடின், காரிடின், லெண்டிடின், மெதிலின், பைக்கோலின், ஏட்டிடைன், விரிடைன், மெதிலைபின், பென்ஸ்பிரின், போர்மோல்டிஹைட், போர்மிக் ஆல்டிஹைட், வெடியுப்பு, மார்ஜுவானா, அக்ரோலின் ஆகியவை. (அப்பாடா!)

இவற்றில் நிக்கோடின் என்ற நச்சுப் பொருள் தான் மிகவும் ஆபத்தானது. இது மூளைப் பகுதியில் உள்ள நுண் துளைகளைப் பாதிக்கும் ஆற்றல் பெற்றதாம். ஒரு சிகரெட்டிலிருக்கும் நிக்கோடினை தனியே பிரித்தெடுத்து, ஒருவரின் இரத்தத்தில் செலுத்தினால், அது அவரை மரணமடையச் செய்யும் அளவிற்கு நச்சுத்தன்மை பெற்றதாம்.

புகைக்கும் போது, முழுப் புகையும் உடலுக்குள் செல்வது இல்லை. இது, இதயத்திலுள்ள இரத்தக் குழாய்களை சுருங்க வைத்து, இதயத்திற்குத் தேவையான இரத்த ஓட்டத்தைத் தடைப் படுத்துகிறது. இதனால், இளமையிலேயே மாரடைப்பு வரும் நிலைமை ஏற்படுகிறது.

இத்தகைய சிகரெட்டைப் புகைக்கும் போது, புகைப்பவரின் உடலினுள், 2000 டிகிரி பரனைட் வெப்பம் செல்கிறதாம். இவ்வெப்பத்தினால் சுவாசப் பை சுவர்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால், புற்றுநோய் எளிதில் தாக்கும் அபாயம் உண்டாகிறது.

சும்மாவா சொன்னார்கள், சிகரெட்டின் ஒரு முனையில் நெருப்பு மறுமுனையில் ஒரு முட்டாளின் வாய் என்று!

# வெண்டிக்காய்



♦ வெண்டிக்காயின் பூர்வீகம் எத்தியோப்பியா. அங்கிருந்து அரேபியா, நைல் நதியோர நாடுகள் வழியாக ஆசியாவில் நுழைந்தது.

♦ முற்றிய வெண்டிக்காயை பேப்பர் தயாரிப்பதற்கு பயன்படுத்துகின்றனர்.

♦ சில இடங்களில் வெண்டிக்காய் விதையை கோப்பித் தூளில் பயன்படுத்துகிறார்கள்.

♦ வெண்டிக்காயில் உள்ள நார்ப்பொருட்களால் கொழுப்பு கரையும் மலச்சிக்கல் நீங்கும்.

♦ அமெரிக்காவில் பிஞ்சு வெண்டிக்காயை நறுக்கி, முட்டையில் தோய்த்து, பாண் தூள் அல்லது சோள மாவில் புரட்டி, பொரித்து சாப்பிடுகிறார்கள்.

♦ வெண்டியின் காய், இலை, விதை, வேர் ஆகிய அனைத்துமே மருத்துவக் குணங்கள் நிரம்பியவை.

♦ பிஞ்சுக் காய்களை குழம்பாகத் தயாரித்து உணவில் சேர்த்துக் கொள்கிறோம்.

♦ வெண்டிப் பிஞ்சுடன் சீனி சேர்த்து, சாறு போல் தயாரித்து அருந்தினால் இருமல், நீர்க்கடுப்பு, எரிச்சல் தணியும்.

♦ குழந்தைகளின் நினைவாற்றலை அதிகரிக்கும். மூளை வளர்ச்சிக்கு ஏற்றது.

# முதலெழுத்து இரகசியம்



MKT பாகவதர் - மாயவரம் கிருஷ்ணமூர்த்தி தியாகராஜ பாகவதர்

MGR - மருதூர் கோபாலன் ராமச்சந்திரன்

NS கிருஷ்ணன் - நாகர்கோவில் சுடலைமுத்து கிருஷ்ணன்

VC கணேசன் (சிவாஜி கணேசன்) - விழுப்புரம் சின்னையா கணேசன்

NT ராமராவ் - நந்தமூரி தாரக ராமராவ்

MR ராதா - மெட்ராஸ் ராஜகோபால நாயுடு ராதாகிருஷ்ணன்

MN நம்பியார் - மஞ்சேரி நாராயணன் நம்பியார்

AM ராஜா - ஏமலா மன்மதராஜு ராஜா

PB ஸ்ரீநிவாஸ் - பிரதிவாதி பயங்கர ஸ்ரீநிவாஸ்

KJ யேசுதாஸ் - கட்டசேரி ஜோசப் யேசுதாஸ்

SP பாலசுப்ரமணியம் - ஸ்ரீபதி பண்டிதரத்யுலு பாலசுப்ரமணியம்

KB சுந்தராம்பாள் - கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள்

PG கிருஷ்ணவேணி (ஜிக்கி) - பிள்ளைவாள் கஜபதி நாயுடு கிருஷ்ணவேணி

## எறும்பு



கடிக்காதபோது
ஏன் கொன்றாய்?
உன்
வேலியற்ற உடம்பில்
விளையாட்டாய் ஊர்ந்தால்
உயிர்ப்பலி கேட்குதோ, உன் விரல்?
மீறிக் கடித்தாலும்
சாவு உனக்கில்லை எனத் தெரிந்தும்
ஊரும் எறும்பை
நசுக்குவதேன், சகிக்காமல்?
சாகும் எறும்பின்
சத்தமற்ற சாவு
ஒசுக்கும் மனத்தை
"குற்றமில்லை" என்கிறதா?
உலகத்தில்
நசுக்க மிகச் சுலபம்
எறும்புதான் என்றாலும்,
சுலபமாய் இருப்பதால்
கொலையா செய்வது?

– எஸ்.வைத்தீஸ்வரன் –


# சினிமா சினிமா



➪ தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்ச், ஆங்கிலம் என ஏழு மொழிகளை சரளமாகப் பேசத் தெரிந்த அஸின் தற்போது ஆசிரியர் ஒருவர் மூலம் மராட்டிய மொழியைக் கற்று வருகிறார். அக்ஷய் குமாருடன் நடிக்கும் "கில்லாடி 786" படத்தில் மராட்டியப் பெண் கதாபாத்திரம் ஏற்றுள்ளதால் தானே டப்பிங் பேச முடிவு செய்து அந்த மொழியைக் கற்று வருகிறார்.

➪ தென்னிந்திய நடிகைகள், மது, புகை பழக்கத்திற்கு, அதிகமாக அடிமையாகியிருப்பதாக, நடிகை சானாகான் சொன்ன கருத்துக்கு, பல நடிகைகள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், சானாகானோ, நான் சொன்னதில் எந்த தவறும் இல்லை. மும்பை ஹோட்டல்களில், தென்னிந்திய நடிகைகள், அளவுக்கு அதிகமாக குடித்து விட்டு தள்ளாடியபடி நடப்பதை, அடிக்கடி நான் பார்க்கிறேன் என்று மீண்டும் துணிச்சலாக கூறி வருகிறார். உள்ளதைச் சொன்னவள் ஊருக்குப் பொல்லாதவள்!

➪ தான் ஒன்று சொன்னால் பத்திரிகைகளில் வேறு மாதிரியாக செய்தி வருவதாகக் கோபத்தில் இருக்கிறார் ஆண்ட்ரியா. அதனால் இனி பத்திரிகைகளுக்குப் பேட்டியே தருவதில்லை என்ற முடிவில் இருக்கிறாராம். பகலில் ஒரு மாதிரியும் மாலைப் பொழுதின் மயக்கத்தில் ஒரு மாதிரியும் பேசினால் வேறு எப்படி செய்தி வரும் என்கிறது பத்திரிகை வட்டாரம்.




➪ அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பிரபலமான TIME ஆங்கில இதழின் அட்டையில் நடிகர் அமீர்கானின் புகைப்படம் இடம்பெற்றுள்ளது. இந்தப் பெருமையைப் பெறும் முதல் இந்திய நடிகர் அமீர்கான். இதற்கு முன்பு பர்வீன் பாபி, ஐஸ்வர்யா ராய் ஆகிய இந்திய நடிகைகளின் புகைப்படங்கள் மட்டுமே "டைம்" இதழில் வெளியாகியுள்ளன.



➪ வீணா மாலிக்கை அடுத்து, பாகிஸ்தானிலிருந்து இன்னொரு நடிகை பொலிவுட்டில் அறிமுகமாகிறார். அவர் - பாகிஸ்தானின் பிரபல மொடலான மெஹரீன் சையத். "லாகூர்" படத்தை இயக்கிய சஞ்சய்பூரன் சிங் சௌஹானின் புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.

➪ ஆர்யா, மாதவன் நடித்த "வேட்டை" படம் தெலுங்கில் ரீமேக் ஆகிறது. நாகார்ஜுனாவின் மகன் நாகசைதன்யா கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில் ஹன்ஸிகா நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், நாகசைதன்யாவுக்கு ஃபோனில் வாழ்த்து சொல்லியிருக்கிறார் தமன்னா. அதோடு மட்டுமல்லாமல், அக்கறையோடு நலம் விசாரித்து முன்பு இருவரும் ஜோடியாக நடித்த "100% லவ்" என்ற தெலுங்குப்படப்பிடிப்பின்போது நிகழ்ந்த இனிய சம்பவங்களை நினைவுகூர... அடுத்த நாள் ஹன்ஸிகா நீக்கப்பட்டு தமன்னா நாயகி ஆகிவிட்டார்.

# பாரதியின் எழுத்துக்கள் பற்றிய எதிர்வினைகளும் - உண்மைகளும்

காய்த்த மரங்கள் கல்லடி படத்தான் வேண்டும் என்பது பிரபலமான ஒரு பழமொழி. இந்த பழமொழிக்கு மிகவும் பொருத்தமானவர் மஹாகவி பாரதி தான்.

பாரதி வாழ்ந்த காலத்திலேயே அவருக்கு எதிர்ப்புகள், விமர்சனங்கள் நிறைய இருந்தது. பல புத்தாக்க விழைஞர்களுக்கும் இது இருப்பது இயல்புதான் என்றாலும் பாரதி இவ்வுலக வாழ்வை நீத்து நூறாண்டுகள் கடந்தாலும் இன்னமும், புதிது புதிதாக பாரதி மேலான விமர்சனங்கள் மேலும் மேலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

உலகெங்கும் பாரதி விழாக்கள் சூடு பிடித்திருக்கிற இந்தக் காலகட்டத்தில், யாழ்ப்பாணத்திலும் பாரதி விழா நடக்க இருக்கிறது. இந்த நிலையில் பாரதி மீதான விமர்சனங்களும் அவை சார்ந்த கட்டுரைகள், நூல்களும் புதிது புதிதாக வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன.

நாமும், நவீன தமிழ்ச் சமுதாயத்தின் விடிவெள்ளியாக வந்துதித்த பாரதி என்ற மகத்தான ஆளுமையின் முழு பரிமாணத்தையும் உணராமல் இருக்கிறோம். பாரதி மீதான சில விமர்சனங்களையும் - அதற்கான உண்மை நிலைகளையும் தொட்டுப் பார்ப்போம்.

'தன் தேவைகளுக்காக எட்டயபுரம் ராஜா, மகாராஜாக்கள் மீதான சீட்டுக் கவிகள் பாடியதாக' பாரதி மீது வே.மதிமாறன் என்பவர் குற்றம் சாட்டுகிறார்.

பாரதி தமது வாழ்வில் தாம் பிறந்த மண்ணாகிய எட்டயபுரத்தின் மன்னருக்கு மட்டுமே சீட்டுக் கவி எழுதியனுப்பினார். அதுவும் அவர் விரும்பி அனுப்பவில்லை.

"எட்டயபுரத்தில் தங்கியிருந்தபொழுது 1919.05.02 எங்கள் (தனது குடும்பத்தாரின்) வற்புறுத்தலின் காரணமாகப் பாரதி ஜமீன்தாருக்கு சீட்டுக்கவிகள் மூன்றும் ஓலைத்தூக்குப் பாடல்கள் ஐந்தும் எழுதியனுப்பினுப்பினார்" என்று பாரதியின் தம்பி சி.விசுவநாதன் குறிப்பிடுகிறார்.

பாரதியின் குடும்ப வறுமையைப் பார்க்கும் பொழுது பாரதியால் எதுவும் செய்ய இயலாத நிலைமை அப்போது இருந்தது. போதிய வருமானம் இல்லை. பாரதியார் சீட்டுக்கவி எழுதும் போது திருமண வயதில் அவருக்குப் பெண் இருந்தாள்.

பாரதி எழுதிய சீட்டுக்கவியைப் பார்த்தோமானால், அவன் மீது நமக்கு அளப்பரிய மரியாதை தான் ஏற்படுகிறது.

பழங்காலத்தில் புலவர்கள் மன்னரிடம் பரிசு பெறுவதற்காக மன்னரை வானளாவப் புகழ்வார்கள். தங்களின் பெருமையையும் சிறிது அதில் குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

ஆனால் மன்னனையும் தன்னையும் சமமாக வைத்து எந்தப் புலவரும் பாடவில்லை. பாரதி இங்குதான் வேறுபடுகிறார். மன்னரைப் பாராட்டுவதைவிட தன்னைப் பற்றிய அறிமுக செய்திகளுக்கே தமது சீட்டுக்கவிப் பாடல்களில் முதலிடம் அளிக்கிறார்.

ஓலைத்தூக்கும் (2-5-1919), சீட்டுக்கவியும் (3-5-1919) எட்டயபுரம் ராஜாவுக்கு (வெங்கடேசுர எட்டப்ப நாயக்கருக்கு) பாரதி எழுதியதாகும். முதலில் 2-5-1919இல் எழுதியதைப் பார்ப்போம்.

ஸ்ரீ எட்டயபுரம் மஹாராஜ ராஜேந்த்ர ஸ்ரீவெங்கடேசு ரெட்டப்ப பூபதி யவர்கள் ஸமூஹத்துக்கு கவிராஜ ஸ்ரீ சி.சுப்பிரமணிய பாரதி எழுதிய ஓலைத் தூக்கு என்ற தலைப்பில் பாரதி எழுதுகிறார். அதில்தான் பாரதியின் புகழ்பெற்ற இந்த வரிகள் வருகின்றன.

'...புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றுங்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே?
சுவைபுதிது நயம்புதிது வளம்புதிது
சொற்புதிது ஜோதி கொண்ட
நவகவிதை யெந்நாளு மழியாத
மஹாகவிதை...'

இந்த ஓலைத்தூக்கில் எட்டயபுர மன்னரின் புகழைப் பாடுவதை விட தன்னைப் பற்றிய பெருமையையே பாரதி அதிகமாகச் சொல்கிறான்.

3-5-1919இல் எழுதிய சீட்டுக்கவியில், பாரதி 'தன்னை நேரிலே வந்து பரிசு கொடுத்திடுக' என்ற பொருளில் பாடுகிறார். உதவி வேண்டி நிற்பவரைப் போய் உதவி கொடுப்பவர் பரிசு கொடுக்க வேண்டும் என்பது யாராலும் மொழியப் படாதது. தன்னை நேரிலே வந்து பார்த்து பரிசு கொடுக்க வேண்டும் என்று பாரதி பாடுகிறார். சங்ககாலத்துப் புலவர் முதல் இக்காலத்து புலவர்வரை யாராலும் இவ்வாறு சொல்ல முடியாது. அதற்கான மனத்திண்மை அப்புலவர்களிடம் இருந்ததா என்பது தெரியவில்லை.

ஆனால் பாரதியிடம் அதற்கான மனத்திண்மை இருந்தது. இது யாசிப்பிற்கும் ஒருவரைப் பெருமைப்படுத்த பரிசு கொடுப்பதற்கும் இடையேயான இடைவெளியினை நமக்குப் புலப்படுத்துகிறது.

இங்கே பாரதி மற்றப் புலவர்களிடமிருந்து விலகியே நிற்கிறார். மஹாராஜ வெங்கடேசுர எட்டப்ப பூபதி என்று சொல்லும்போது தன்னை கவிராஜ சுப்பிரமணிய பாரதி என்று மன்னருக்கு சமமான நிலையிலேயே தன்னை நிறுத்திக் காண்கிறார். இதுவும் மற்றப் புலவர்களிடம் நாம் காணாதது.

'உப்பரிகைகளிலும், மாட மாளிகைகளிலும், அரண்மனைகளிலும், அந்தப்புரங்களிலும் கோயில் தாழ்வாரங்களிலும் பணம் படைத்தவன் காலடியிலும் அடிமையாய்க் கிடந்த தமிழை விடுதலை செய்து, எளிமையாக்கி, வீதிக்குக் கொண்டுவந்து மக்கள்மயப்படுத்தியவன் பாரதி" என்று பாரதிமேல் அபாண்டமாகப் புகழ் சுமத்துகிறார்கள் அறிஞர்கள்..." என்று கூறுகிற மதிமாறன், பாரதிக்குமுன் சித்தர்கள் மிக மிக எளிமையாகத் தமிழில் பாடல்களை அமைத்திருக்கிறார்கள் என்று கூறுகிறார். சித்தர்களின் பாடல்களை எடுத்துக்காட்டி விட்டு மதிமாறன் இப்படி முடிக்கிறார்:

"இவ்வளவு எளிமையாக சமூகம் சார்ந்து சித்தர்கள் சிந்தித்து இருக்கும்போது- 'பாரதிதான் முதலில் தமிழை தரைக்குக் கொண்டு வந்தார்' என்று சொல்வது அபாண்டப் புகழ்தானே".

இப்படி பாரதி புகழ்பாடும் அறிஞர்களை விமர்சிக்கிறார் மதிமாறன்.

பாரதிக்குமுன் தமிழின் பரவல் மக்களிடையே எப்படி இருந்தது? ஏன் பாரதியாரை தமிழ் மறுமலர்ச்சிக்கு உரியவராக்குகிறோம்? என்ற வினாக்களுக்கு விடையாக அன்றே பேரறிஞர் அண்ணாத்துரை பேசுகிறார்..

"பாரதிக்கு முன்பு வாழ்ந்து சென்ற புலவர்கள் ஆலய மணியாக அல்லது அரண்மனை முரசுவாக செயற்பட்டு வந்தார்கள். மக்கள் உள்மனத்தில் இருந்த எண்ணங்களை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. மக்களிடமிருந்து அவர்கள் தொலை தூரத்தில் இருந்து கொண்டார்கள்.

அறவிலை வணிகர்கள் போலவும் இன்பத்தை விற்பனை செய்பவர்களாகவும் இருந்துவந்தார்களேயன்றி, அவர்கள் மக்கள் கவிஞர்களாக ஒருபோதும் இருந்ததில்லை. அதனால்தான் சங்க காலத்திற்குப் பிறகு பாரதியின் காலம்வரை மக்கள் கவிஞர் என்று ஒருவரையும் நாம் பெற முடியாமல் இருந்தது.

பசப்பு மொழிகளும் பாசாங்குத் தன்மைகளும் கண்டவிடத்து, அவற்றையெல்லாம் தோலுரித்துக் காட்டுவது ஒரு மக்கள் கவிஞனின் பணியாகும். பாரதி அதைச் செய்தான்.

மக்கள் கவிஞனின் பணி மகத்தானது. புதிய உண்மையை மக்கள் புரிந்துகொள்ளவும், புதிய வாழ்வு நெறியைக் கைக்கொள்ளவும் வாழ்வில் எல்லாவற்றையும் சரியாக மதிப்பீடு செய்வதற்குரிய வழிமுறைகளைக் கண்டறியவும் மக்கள் கவிஞன் மக்களை வழிநடத்த வேண்டும்.

பகுத்தறிவுப் பாதையில் செல்லுவதற்கு மக்கள் தயங்குவர். அவர்களைத் தள்ளிவிட வேண்டிய தேவையைப் பாரதி உணர்ந்தான். அதையும் அவன் செய்தான். மந்திரவாதி சொன்ன மாத்திரத்தில் மனக்கிலி, சூனியங்கள் என்று இந்த மக்களுக்குத்தான் எத்தனை துயர்கள்! சிப்பாயைக் கண்டு அஞ்சுவர் கைகட்டி நிற்பர் பூனைபோல் நடப்பர். கண்ணிலாக் குழந்தைகள் போல் மற்றவர் காட்டுகின்ற வழியிற் சென்று மாட்டிக் கொள்வர்.



இன்று பாரதியார் நினைவு தினம்

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று அறிவிப்பு செய்தான். விழலுக்கு நீர்பாய்ச்சுவதா? வெறும் வீணருக்கு உழைப்பதா? பூமியில் எவர்க்கும் அடிமை செய்யோம் என்று மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகிறான். மக்களுக்காகப் பணியாற்றுவதும் மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்ப்பதுமே பாரதியின் சமயமாக இருந்தது.

சோதிடத்தின் பிடியிலிருந்து மக்களை விடுவித்து அவர்கள் முன்பாக வானநூலறிஞ்ரை அறிமுகப் படுத்துவது மக்கள் கவிஞனின் பணியாகும். அதே போல், இரசவாதம் புரிவோரை மக்கள் மன்றத்திலிருந்து விரட்டிவிட்டு வேதியலறிஞரை அங்குவரவழைத்தல், மதகுருமாரை அகற்றிவிட்டு அவ் விடத்தில் கல்வி புகட்டும் ஆசிரியரை இடம் பெறச் செய்தல், சித்துவேலை செய்பவரின் செல்வாக்கை நீக்கிவிட்டு அங்கே தேவைப்படும் பொதுமருத்துவர் வந்து செல்வதற்கு ஏற்பாடு செய்தல், மூட நம்பிக்கைகளை முற்றாக அகற்றி விட்டு, அங்கே அறிவியலை மலர்ச்சி காணச் செய்தல் - என்றிவையெல்லாம் மக்கள் கவிஞனின் மகத்தான பணிகளாம்.

சுருங்கச் சொல்வதாயின், மக்கள் கவிஞனின் பணி ஒரு புரட்சியாளனைப்போல் செயற்படுவதாகும். ஒரு புரட்சிக்காரனை விட இது கடினமானது. ஏனென்றால், ஒரு கொடியவனைத் தம்முடைய மீட்பராகவும், ,மெய்யான ஒரு மீட்பரைக் கொடியவனாகவும் மக்கள் கருதிவிடுகின்றனர். இடர்ப்பாடுகள் நிறைந்த இவ்விதச் சூழலிலும் துணிச்சலுடன் பாரதி இப்பணிகளை மேற்கொண்டான். அவன் தொடுத்த போர் இன்றும் முடிவுக்கு வரவில்லை. எனினும் போரை வெற்றிக்கு இட்டுச் செல்லப் போதுமான படைக்கலச் சேமிப்பாக எண்ணங்களை அவன் நமக்கு விட்டுச் சென்றுள்ளான். நிலைத்த புகழைப் பாரதிக்குச் சேர்க்க வேண்டும் என்று விரும்புகின்ற ஒவ்வொருவரும் செய்ய வேண்டுவதெல்லாம் இந்தப் போரைத் தொய்வின்றித் தொடர்வதுதான்.

(பாரதியை மக்கள் கவிஞன் என்று மதிப்பிட்டு அறிஞர் அண்ணா ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் 'மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா மலரில்' (1982) இடம் பெற்றுள்ளது. அதன் சாரமே இது.)

ஆக, விபரீதப் பார்வையோடு எழுதப்படுகின்ற பாரதி பற்றிய அவதூறுகளைப் பார்க்கும் தோறும்.. அறிவு பூர்வமாகப் படிக்கும் தோறும் பாரதி மீதான மதிப்பும் மாண்பும் பல்மடங்கு அதிகரிப்பதையே உணர முடியும்..

முதன்முதலில் ஹைக்கூ கவிதையை அறிமுகப் படுத்தியவர் பாரதி, முதன்முதலில் கருத்துப்படம் (கார்ட்டூன்) போட்டவர் பாரதி. மொழியாக்கம், சிறுகதை, எளிய தமிழில் வசன உரைநடை போன்றவற்றை பாரதி அன்று அநாயாசமாகக் கையாண்டார். இது மக்கள் மத்தியில் புதிய ஒளியைப் பாய்ச்சியது. பாரதியின் பெருமைகளே கண்களிலும் கருத்திலும் நிறைகின்றன..

– நீர்வை. தி.மயூரகிரி சர்மா கட்டுரையிலிருந்து

> ஒரு கொடியவனைத் தம்முடைய மீட்பராகவும், மெய்யான ஒரு மீட்பரைக் கொடியவனாகவும் மக்கள் கருதிவிடுகின்றனர். இடர்ப்பாடுகள் நிறைந்த இவ்விதச் சூழலிலும் துணிச்சலுடன் பாரதி இப்பணிகளை மேற்கொண்டான். அவன் தொடுத்த போர் இன்றும் முடிவுக்கு வரவில்லை. ........


# கோப்பாய் பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2012ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் தமது நிதிமூலம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அபிவிருத்தி திட்டங்களுக்காக 9 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். இதன்படி-

ஊரெழு கணேசா வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கென 1 இலட்சம் ரூபாவும், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயத்திற்கு பல்லூடக எறிகருவி கொள்வனவுக்கு 1 இலட்சம் ரூபாவும், ஒளிநிலா சனசமூக நிலைய முன்பள்ளிக்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கென 35 ஆயிரம் ரூபாவும்,றோயல் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், சென். மைக்கல் முன்பள்ளிக்கு மலசலகூடம் அமைப்பதற்கு 50ஆயிரம் ரூபாவும், வள்ளிஅம்மன் சனசமூக நிலைய கட்டட வர்ணம் பூசுதலுக்கு 25 ஆயிரம் ரூபாவும், குருநாதர் சிறுவர் பாடசாலைக்கு கட்டடம் அமைத்தலுக்கு 50ஆயிரம் ரூபாவும், வளலாய் கலைவாணி முன்பள்ளி புனரமைப்புக்கு 35ஆயிரம் ரூபாவும், ஒளவையார் சனசமூக நிலைய கட்டட புனரமைத்தலுக்கு 50 ஆயிரம் ரூபாவும், கலைமகள் மகளிர் அபிவிருத்திச் சங்கத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், சர்வோதயா சனசமூக நிலையத்திற்கு தையல் இயந்திரக்கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணக் கொள்வனவுக்கு 25ஆயிரம் ரூபாவும், சிவசக்தி சனசமூக நிலை மின்இணைப்புக்கு 25ஆயிரம் ரூபாவும், யாழ். பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கென (சிறியது) 50 ஆயிரம் ரூபாவும், சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு பாண்ட் (சிறியது) வாத்தியக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், யாழ். வாதரவத்தை விக்கினேஸ்வரா .வித்தியாலயத்திற்கு மின் இணைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும், சரஸ்வதி முன்பள்ளி கட்டட புனரமைப்புக்கு 2 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# தையல் பயிற்சி காட்சிக் கூடம் திறப்பு



கிளிநொச்சி - விநாயகபுரத்தில் தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட காட்சிக் கூடத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

கிளிநொச்சிக்கு கடந்த 7ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் விநாயகபுரத்தில் காட்சிப்படுத்தப்பட்ட காட்சிக் கூடத்தை திறந்து வைத்ததுடன், துறை சார்ந்தவர்களுடனும் கலந்துரையாடினார்.

ஆறு மாதகாலப் பயிற்சி நெறியை நிறைவு செய்த 25 பேரின் ஆக்கங்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கான நிதியுதவியினை புலம்பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் வாழும் Dr. நித்தி கனகரட்ணம் வழங்கியுள்ளார்.

நிகழ்வில் பயிற்சி ஆசிரியர்களுக்கான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. இதன்போது ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கொழும்பு செல்லும் பயணிகள் கொழும்புத்துறை செல்லும் அவலம்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்தும் பிறமாவட்டங்களிலிருந்தும் யாழ். வரும் சுற்றுலாப்பயணிகள் யாழிலிருந்து யாழ். பிரதான வீதியூடாக திரும்பிச் செல்லும் போது சரியான பாதை வழி தெரியாது திசை மாறிச் செல்லும் நிலை காணப்படுகிறது.

யாழ். பிரதான வீதியூடாக வரும் சுற்றுலாப் பயணிகள் ஏ-9 வீதிக்கு செல்லும் பாதை தெரியாது கொழும்புத்துறைக்கு சென்று பின்னர் அங்கு நிற்பவர்களிடம் கேட்டே திரும்பிச் செல்கின்றனர்.

பிரதான வீதியூடாகச் செல்லும் பஸ்தியன் சந்தியில் கண்டி வீதி என 3 மொழிகளிலும் பெயர்ப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அம்புக்குறி போட்டு காட்டப்படாமையால் சுற்றுலாப்பயணிகள் எந்தப் பாதையூடாகச் செல்வதென்று திசை தெரியாமல் அலைக்கழிவதை அவதானிக்க முடிகிறது.

நாளாந்தம் பல பேருந்துக்களில் பிரதான வீதியூடாக சுற்றுலாப்பயணிகள் இரவு- பகலாக செல்கின்ற நிலையில், பாதை வழி சரியான முறையில் குறிப்பிடப்பட்டால் இவ்வாறான நெருக்கடிகள் இடம்பெறுவது தவிர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பெயர்ப்பலகையில் கண்டிவீதி எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஏ-9 வீதி எனவும் சிறிய எழுத்தில் குறிப்பிடப்பட்டு அம்புக்குறி காட்டப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

# கலாசார விழா

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் இவ்வாண்டுக்குரிய கலை கலாசார விழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது இவ்விழாவில் "பூந்துணர்" சஞ்சிகை வெளியீடும் இடம்பெறவுள்ளது.

கலாசார பேரவையின் தலைவரும் பூநகரி பிரதேச செயலாளருமான கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின பிரதித்தலைவருமான மு.சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரனும் கலந்து கொள்ள உள்ளனர். (112)

# உயர் கற்கை நெறிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

(வலிகாமம்)

இலங்கையில் உயர் கல்வியை வழங்கி வரும் தனியார் கல்வி நிறுவனமான BCAS கல்வி நிறுவனத்தின் உயர் கற்கை நெறிகளிற்கான அறிமுகக்கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் க.பொ.த (சா/த), (உ/த)பரீட்சைக்குத் தோற்றிவிட்டு இருக்கும் மாணவர்களினது எதிர்கால கற்கை நெறித்தெரிவு தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்காக இது அமைநதிருந்தது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியிருந்ததுடன் பெற்றோரும் பங்கு பற்றியிருந்தனர்.

இக் கருத்தரங்கில் இந்நிறுவனத்தின் மாணவர்கள் ஆலோசகர், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மாணவர்கள் கற்க வேண்டிய முறைமை, கற்கை நெறியைத் தெரிவு செய்யும் விதம், வெளிநாட்டுக்கற்கை நெறிகளிற்கான ஆலோசனைகள், Bcas கல்வி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் முதலான விடயங்கள் தொடர்பாக கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது. (06)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஆனை வந்தது முதலில்
அப்புறம் கலைந்து போனது
குதிரை மீதில் ஒருவன்
கொஞ்ச நேரம் போனான்
பாட்டன் புரண்டு மல்லாந்தான்
பானை வெடிச்சு மரமாச்சு
அலையாய் சுருண்டது கொஞ்சம்
மணலாய் இறைந்தது கொஞ்சம்
கணத்தில் மாறிடும் மேகம்
உண்மையில் எது உன் ரூபம்?
**– மாலன்**

ஊர்த் தீயை
அணைக்கலாம்
உலைத் தீயிலும்
ஒரு கண் இருக்கட்டும்.
எட்டுமணி நேரம்
வேலை செய்ய வேண்டும்
எட்டுமணி நேரம்
தூங்க வேண்டும்
எத்தனை மணி நேரம்
வாழ வேண்டும்?
**– விக்ரமாதித்யன்**

சூர் வாளொன்று
எப்போதும் என்னிடம்
நண்பர்களைக் கண்டால்
முதுகுக்குப் பின் ஒதுங்கிவிடும்
அபிமானிகளைக் கண்டால்
உறையினுள்ளிருந்து
கம்பீரமாய் எட்டிப் பார்த்து
அவர்முகம் நோட்டமிடும்
வேண்டாதவரென்றால்
நாக்கில் வந்து ஒட்டிக்கொள்ளும்
அழகிய பெண்களை எதிர்கொண்டால்
முலைகளை அறுத்து ரசித்து மகிழும்
குழந்தைகளிடம்
பிரியம் காட்டுவதாய்
நினைத்து
குரல்வளையைக் கீறிவிடும்
ரோஜாக்களைக் கொய்து
கைப்பிடியில் சூடி மகிழும்
வாளுடன் எதிரி வந்தால்
உறையினுள்
பதுங்கிக் கொள்ளும்
வாளின்றி வரக் கண்டாலோ
உறைவிட்டுக் கிளம்பி
பயமுறுத்தும்
விட்டெறியும் மார்க்கமறியேன்
என்னிடம் எப்போதும்
சூர் வாளொன்று.
**– சின்னக் கபாலி**

மெய் தின்னும் நோய்
காலம் மென்ற உறவுகள்
கைபிரிந்த சிநேகிதங்கள்
ஊர் வாய் மெல்ல
கொஞ்சம் பலவீனம்
இவற்றினோடென் வாழ்க்கை
சிறகிழந்து தத்தும்
குருவியென.
**– அச்சுதன் அடுக்கா**

ஓதுவார் தொழுவாரெல்லாம்
உழுவார் தலைக்கடையிலே.
**– கம்பன்**

உள்ளார் உடமை எனல்
இல்லார் இழந்ததே...
**– பாரதிதாசன்**

காலத்தை என்ன செய்ய?
பேனாவைக்
கைக்குட்டையைத்
தொலைப்பது போல்
காலத்தைத்
தொலைக்க முடியவில்லை.
காலம் காட்டும் கடிகாரம்
காலம் பற்றி
அறிந்ததில்லை.
பறப்பன, ஊர்வன,
பஸ் ஸ்டாண்டில்
படுத்திருக்கும்
பரமசாதுப் பசுக்கள்,
முகம் பார்க்கும்
கண்ணாடிக் குருவிகள்
எதற்கும் காலம் பற்றிய
ஓர்மையில்லை;
என்னைத் தவிர.
விழித்தாலும் உறங்கினாலும்
வீணே என்னுடனிருக்கும்
காலத்தை என்ன செய்ய?
**– வண்ணநிலவன்**

விளக்கிலே திரி நன்கு சமைந்தது
மேவுவீர் இங்கு தீக்கொண்டு தோழரே!
**– பாரதி**

தலைமேல் கற்களைச் சுமந்தபடி
என் அப்பா போகும்போது
மீசையைத் திருகியபடி கங்காணி சொல்வான்
'டேய் கிட்ணையா
அருமையான ஒரு லாவணி பாடுடா'
என் அப்பா பாடுவார்
பச்சை குத்திய கழுத்து நரம்புகள் புடைக்க!
அவருடைய பாட்டில்
நிலவு வரும், சூரியன் வரும்
பூக்கள் மலரும், கடல் அலைகள் எழும்
காதல் போதைமிக்க கன்னியும் வருவாள்
வியர்வைக் கறை படிந்த
கரங்கள் கைதட்டும்
எங்கும் ஒரே பாராட்டு ஒலியெழும்
என் அப்பா
நெகிழ்ந்து நன்றிப்பெருக்கில் தத்தளிப்பார்
வீட்டுக்குத் திரும்பும்போது
சோற்றுப் பாட்டோடு மல்லாடுவார்
அந்தப் பாட்டில் அவர் வென்றதே இல்லை.
**– பீம்சென் தேதே (மராட்டி)**

ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ – இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ? **– பாரதிதாசன்**

அவர்கள் என்னிடம் சொல்கின்றனர்:
சாப்பிடு, குடி. உன்னால் முடியும்படி சந்தோஷப்படு.
ஆனால் நானெப்படி உண்ணவும் குடிக்கவும் முடியும்?
பசியார்ந்த மனிதனிடமிருந்து நான்
ரொட்டியைப் பிடுங்கிக் கொள்ளும்போது,
என் தண்ணீர் குவளை தாகத்தால்
சாகுமொருவனுக்கு இல்லாதாக்கும் போது.
என்றாலும் நான் உண்கிறேன், குடிக்கிறேன்.... **– ப்ரெக்ட்**

# மின் பாவனை இணைப்பை விரைவாக வழங்கப் பணிப்பு

(பச்சிளைப்பள்ளி)

வடக்கின் வசந்தம் மின் வழங்கல் திட்டத்தின் மூலம் மின் சாரம் வழங்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கான பாவனை இணைப்புக்கள் வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் மின்சார சபையினருக்கு பணிப்பு விடுத்துள்ளார்.

கடந்த ஆறாம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மின் இணைப்பு வழங்குதல் தொடர்பான கலந்துரையாடலின் போதே இப்பணிப்புரை விடுக்கப்பட்டது.



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்பிரிவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின் சாரம் வழங்கப்பட்ட பகுதிகளான புலோப்பளை, மாசார் போன்ற பகுதிகளில் வாழும் மக்களின் வீடுகளுக்கு விரைவாக மின் இணைப்புக்களை வழங்குமாறு யாழ்.மாவட்ட மின் சாரசபையினரைப் பணித்த நாடாளுமன்ற உறுப்பினர். புலோப்பளை பகுதியில் மின் இணைப்பைப் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள 102 பேருக்கும் மற்றும் மாசார் பகுதியில் மின்சாரத்தினை பெற விண்ணப்பித்துள்ள 28 பேருக்கும் இணைப்புக்களை விரைவாக வழங்குமாறும் பணிப்பு விடுத்தார். அத்தோடு வரும் பதினைந்து நாட்களுக்குள் புலோப்பளைப் பகுதிக்கும் வரும் 20 ஆம் திகதி தொடக்கம் மாசார் பகுதிக்கும் இணைப்புக்கள் வழங்கப்படும் எனவும் மக்களிடம் உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களான தியாகராஜா மற்றும அன்ரன் அன்பழகன் ஆகியோரும் யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் ஞானகணேசன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், மின் அத்தியட்சகர் அன்ரன், மின் பொறியியலாளர் லிங்கரூபன் ஆகியோரும் மாசார், புலோப்பளை ஆகிய கிராமங்களைச்சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## "பேஸ்புக்" மூலம் அச்சுறுத்தல்; இலங்கையருக்கு டுபாயில் வழக்கு

(கொழும்பு)

பேஸ்புக் சமூக இணையத் தளத்தின் ஊடாக பெண் ஒருவரை அச்சுறுத்தியதாக இலங்கையர் ஒருவருக்கு எதிராக டுபாயில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் ஒருவரை பேஸ் புக்கின் ஊடாக அச்சுறுத்தியதாக குறித்த இலங்கையருக்கு எதிராக டுபாய் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

33 வயதான மின்சார தொழில்நுட்பவியலாளருக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காதலிக்க மறுத்த காரணத்தினால் இலங்கையர் தமக்கு எதிராக பேஸ் புக்கில் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக குறித்த பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

கொலை அச்சுறுத்தல் விடுத்தமை உண்மை எனவும், ஆயிரம் திர்ஹாம் பணம் பெற்றுக் கொண்டு மீள அளிக்கவில்லை எனவும் இதனால் தாம் குறித்த பெண்ணை எவ்வாறு கொலை செய்வது என்பது தொடர்பில் பேஸ் புக்கில் நண்பர்களின் கருத்துக்களைக் கோரியதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி குறித்த வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும என எதிர்பார்க்கப்படுகிறது.

## அமைச்சரின் மகன் தாக்குதல்; இராணுவ அதிகாரி படுகாயம்

அமைச்சர் ஒருவரின் மகனுடைய தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த இராணுவ மேஜர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சைப் பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி.அஜித் ரோஹன தெரிவித்தார்.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் வைத்து கடந்த 8 ஆம் திகதி இரவு குறித்த தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும் தாக்குதல் நடத்திய பின்னர் பிரபல அமைச்சரின் மகன் இராணுவ மேஜரின் துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பிரபல அமைச்சரின் மகன் இதற்கு முன்னரும் நபரொருவரை தாக்கிய சம்பவத்தில் சிக்கியமை குறிப்பிடத்தக்கது

# விலைப்பாலை விட முலைப்பால் சிறந்ததன்றோ?

## இன்று பாரதியின் நினைவு தினம்



"பாட்டுத் திறந்தாலே - இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்"

என்ற 'கவிதைவெறி' கொண்ட பாரதியின் சிந்தனையில், கற்பனையில் எண்ணற்ற உயர் நோக்கங்கள் குமிழியிட்டெழுந்ததை அவர்தம் பாடல்களையும், கட்டுரைகளையும் கற்போர் நன்கு அறிவர். பொதுமக்கள் கடவுளை வழிபடுவதற்குத் திருக்கோயில்கள் இன்றியமையாதவை. வழிபாட்டிற்கு இன்றியமையாத நல்ல சூழ்நிலையும், தூய்மையையும் போற்றிக் காப்பவை. அதுபோலவே பொதுமக்கள் தம் குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்தவர்கள் இவர்கள் கல்வியில் பயிற்சி பெறுவதற்கு எல்லா நிலைகளிலும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இன்றியமையாதவை என்பதை -

'வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி

என்ற கவிதையில் புலப்படுத்துவார். வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னால் வரும் இளைஞர்கள் பெற்றுப் பயன் பெற வேண்டும். தம்மையும் உயர்த்தி, தாம் பிறந்த நாட்டையும் உயர்த்த வேண்டும் என்பது பற்றி பாரதி கனவு கண்டான். வறுமையின் காரணமாக இளைஞன் ஒருவன் கல்வி பெறுவதற்கு தடை ஏற்படக் கூடாது என்பதையும் சிந்தித்துள்ளார் கவிஞர். செல்வர்களும் அரசும் இதற்கு வழிவகை செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவது போல் -

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

தருமங்கள் யாவிலும் சிறந்தது 'ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்' என்பது பாரதியின் முடிந்த முடிவு. நமது நாட்டுச் செல்வந்தர்கள் இந்தக் கவிதை வரியை உணரவேண்டும். வெறும் ஆடம்பரங்களுக்கு செலவு செய்வதை விடுத்து பயனுடைய முறையில் இறைவன் கொடுத்த செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும்.

ஆலயங்கள் நல்ல முறையில் வழிபாட்டிற்குரிய இடமாகத் திகழ வேண்டும். ஆனால் இன்று நமது நாட்டில் நடப்பது என்ன? விண்ணுயர் கோபுரங்கள் கட்டுகிறோம். தடல் புடலாகத் திருவிழாக்கள், ஒரு இலட்சத்துக்கு மேலான பணச் செலவில் சினிமாக் கலாசார நிகழ்வு..........! இவற்றினால் விளைவதுதான் என்ன? 'திருவிழாவில் சண்டை' இதுதானே செய்தியாகக் கிடைக்கிறது. இந்தப்பணத்தில் ஊரில் உள்ள சன சமூக நிலையத்தைத் திருத்தி நல்ல கல்விக் கூடமாக மாற்ற முடியாதா? நமது பூமியில் எத்தனை பாடசாலைகள் அடிப்படை வசதி கூட இன்றிக் கிடக்கின்றன. யாராவது ஒரு பாடசாலையைத் திருத்தியமைக்க முன்வந்திருக்கின்றார்களா?

'நெஞ்சு பொறுக்குதில்லையே.......' பாரதியின் வரிகள்தாம் நினைவுக்கு வருகின்றன. எல்லாவற்றையும் அரசு செய்ய வேண்டுமென்பது சாரியானதல்ல. பொது மக்களும் உதவ வேண்டும்.

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்'
என்றும்,

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்ற வேண்டும்'

என்றும் பாரதி யோசனை கூறுகின்றார். தமிழில் எல்லாக் கலைகளையும் எழுதவும், விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக் கொள்வதில்லை. தமிழ்மொழியில் எல்லாவற்றிற்கும் தக்க கலைச் சொற்கள் இல்லாத காரணத்தால் இவ்வாறு எண்ணுகின்றனர். எந்த மொழியிலும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றாலன்றிப் புதிய கலைகட்கு வேண்டிய சொற்களும், சொற்றொடர்களும் அமைவதில்லை. பொருள்களை - கருத்துக்களை எடுத்துக் கொண்டு விளக்க முயன்றால் இவை தாமாகவே அமைந்துவிடும். கலைச் சொற்களை உண்டாக்கிக் கொண்டு தாய் மொழியால் கற்பித்தலைத் தொடங்க வேண்டும் என்று நினைப்பது நீந்தக் கற்றுக் கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும்.

காப்பெற்சாலை அமைக்கும் முன்னர் மண்சாலை. மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை. இப்படி பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்த நிலையைத் தாய்மொழி பயிற்று மொழியாக அமைவதிலும் சந்திக்க வேண்டும். ஆங்கிலக் கல்வி பற்றிய பாரதியின் சிந்தனையை நினைவு கூர வேண்டும்.

மொழியைக் கற்கக்கூடாது என்பது சரியானதல்ல. சிங்களம் வேணடாம் என்றோம். சொன்னவர் அம் மொழியில் புலமையுடையவர்களாக இருப்பதைக் காணுகின்றோம். ஆங்கில மோகத்தினால் தாய் மொழியைப் புறக்கணிக்கக் கூடாது. இன்று நம் தமிழ் பகுதிகளில் தாய்த்தமிழ் வளர்ச்சி எப்படியிருக்கிறது?

இலக்கிய இலக்கண வளமும் சொற்களஞ்சியப் பேறும் பெற்றுள்ள தமிழ்மொழியின் நீர்மையை அறிந்து, பிற கலைகளையும் தமிழ்மொழியில் வடித்துத் தரும் பணியில் ஈடுபடுவோர்கள்தாம் 'தமிழ் மொழி அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும்' என்ற உண்மையை அறிவர். அப்பொழுதுதான் 'சொல்லும் திறமையும் தமிழ் மொழிக்கில்லை' என்ற வசையும் நீங்கும். தமிழ்மொழியும் வளர்ந்து மேலும் வளம் பெறும்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்'

என்ற பாட்டடியில் கவிஞர் - ஞானம் கனிந்த நலம் தெளிவாகப் புனலனாகும்.

'பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்'

என்று கவிஞர் அறிவியல் கல்விக்கு ஆற்றுப்படுத்துகின்றார். தாய் மொழி மூலம் அக்கல்வி பெற வாய்ப்பு அமைக்கப்பெறுமானால் பருத்தி புடைவையாய்க் காய்த்தது போன்ற பலனை நல்கும். விலைப் பர்லை விட முலைப்பால் சிறந்ததன்றோ?

'பாரதியைப் போற்றுவோம்'

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்
பொதுச் செயலாளர்
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## விஞ்ஞானம்


ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன்
(B.sc)

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### கட்டுரை வினாக்கள் B

06)

a) விலங்குகளின் உடலில் உட்புற, வெளிப்புற மேற்பரப்புக்கள் யாவற்றையும் போர்த்துக் காணப்படம் இழையம் மேலணி இழையமாகும்.




i)

a) a,b,c,d என்பவற்றைப் பெயரிடுக.

b) a,b என்பவற்றை இனங்காண உதவும் கட்டமைப்பு வேறுபாடுகள் 2 தருக.

c) a,b,c மேலணி காணப்படும் இடங்கள் ஒவ்வொன்று தருக.

d) அடித்தள மென்சவ்வில் காணப்படும் நார்களைப் பெயரிடுக.

e) d இழையத்தின் தொழில் யாது?

ii)

a) மனித உடலில் திரவ நிலையில் காணப்படும் இழையத்தைப் பெயரிடுக.

b) இத் திரவ இழையத்தின் நிறத்திற்குக் காரணமான புரதம் யாது?

c) மனிதனிலே அமைந்த மூன்று வகை தசையிழையங்களையும் தருக.

d) நீர் குறிப்பிட்ட தசையிழையங்களில் இச்சையின்றி இயங்கும் தசையிழையங்கள் 2 எவை?

e) மேலே d இல் குறிப்பிட்ட தசையிழையங்கள் 2 இற்கும் இடையிலான வேறுபாடு ஒன்று தருக.

b)

a) தாவர உடலில் காணப்படும் நிலையிழையங்கள் இரண்டினதும் வகைகளைத் தருக.

b) பின்வரும் தொழில்களை மேற்கொள்ளும் எளிய நிலையிழையங்களுக்கு உதாரணம் தருக.

i)புற் தாவரங்களில் வீக்க நிலை பேணல்

ii)தாவர தண்டுகளின் பொறிமுறை தாங்கல்

iii)தாவர வித்துக்களின் வன்மைக்கு உதவல்.


c) தாவரங்களில் பதார்த்தக் கடத்தலுக்காகக் காணப்படும் இரு வகை இழையங்களையும் தருக.

d) மேற்படி இழையங்களினால் கடத்தப்படும் பதார்த்தங்களை தருக.

### இரசாயனவியல்

07)

A) சுண்ணாம்புக்கல், களிமண் என்பவற்றைப் பயன்படுத்தி சீமெந்து தயாரிக்கப் பயன்படும் அமைப்பு கீழேயுள்ளது. கிடையுடன் $10^0$ சாய்வாக அமைக்கப்பட்டுள்ள இவ் உருளைச்சூளை அதன் அச்சைப் பற்றிச் சுழலுகின்றது. நிலக்கரி தகனமடையும்போது இங்கு பல தாக்கங்கள் நடைபெற்று கிளிங்கர் உருவாக்கப்பட்டு அதிலிருந்து சீமெந்து பெறப்படும்.




i)

a) சீமெந்து உற்பத்தியின் இரு முறைகளும் எவை?

b) சுண்ணாம்பு, களிமண் என்பன கலக்கப்படும் விகிதங்களைத் தருக.

c) சுழலும் சூளையினுள் காணப்படும் வலயங்களை குறிப்பிடுக.

ii)


a) அவ் வலயங்கள் ஒவ்வொன்றினுள்ளும் நடைபெறும் செயற்பாடுகள் / தாக்கங்களைத் தருக.

b) கிளிங்கரின் இயல்புகள் 2 தருக

c) கிளிங்கரினுள் 2- 4% ஜிம்சம் சேர்ப்பதன் காரணம் யாது?

d) சுண்ணாம்புச் சூளையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் 2 தருக.

**B)** சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழிலைக் காட்டும் இப் படத்தில் x,y,z எனக் குறிப்பிடப்பட்ட உற்பத்திகள் காட்டப்பட்டுள்ளது.




i)

a) இங்கு a எனக் குறிப்பிடப்பட்ட விளைபொருள் யாது?

b) x,y,z எனக் குறிப்பிடப்படும் உற்பத்திகள் எவை?

c) x இற்கு நீர் சேர்க்க உருவாகும் வாயுவின் பயன் ஒன்று தருக.

ii)

a) இங்கு இரும்பு பிரித்தெடுக்க c இல் சேர்க்கப்படவேண்டிய பதார்த்தங்கள் எவை?

b) இங்கு b யில் சேர்க்கவேண்டிய ஒரு பதார்த்தத்தை வெப்பமேற்றும்போது நீரிழக்கப்பட்டு என்புகளை ஒட்டச் செய்யப் பயன்படும் பதார்த்தம் ஒன்று உருவாக்கப்படும். இதன் இரசாயனத் தாக்கத்தைத் தருக.

08.

A) ஆவர்த்தன அட்டவணை ஒன்றின் அமைப்புத் தரப்பட்டுள்ளது. இங்கு தரப்பட்ட குறியீடுகள் அம் மூலக நியம குறியீடுகள் அல்ல.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | | | | | | |
| B | | C | D | | E | G |
| H | J | | | | F | |
| I | | | | | | |

i) a) ஒரே கூட்ட மூலகங்கள் 2 தருக.

b) E,H ஆனது Gன் இலத்திரன் நிலையமைப்பை அடைவதற்கான சமன்பாட்டைத் தருக.

c) இங்கு E,F என்பன சேர்ந்து $FE_2$, $FE_3$ ஆகிய சேர்வைகள் உருவாக்கப்படின் $FE_2$, $FE_3$ என்பவற்றை இனங்காண்க.

ii)

a) F ஆனது வளியில் வெப்பமேற்றும்போது E யுடன் சேர்ந்து $FE_2$ உருவாகும் போது தோன்றும் அவதானம் யாது?

b) இச் சேர்வையினுள் பாசிச் சாயத்தாளை இடும்போது உமது அவதானம் யாது?

iii)

a) சிறிய துண்டு H ஐ வளியில் திறந்து வைக்கும்போது ஏற்படுத்தும் தாக்கங்களைத் தருக.

b) J யானது, வளியில் வெப்பமேற்றும்போது $N_2$ வாயுவுடன் தாக்கி உருவாகும் விளைவை பெயரிட்டு அதனுள் நீர் சேர்க்கும்போது அவதானம் யாது?

B) D யுடன் A சேரும்போது உருவாகும் சேர்வையிலுள்ள

i) a) பிணைப்பு வகையைத் தருக.

b) பிணைப்பின் புள்ளி புள்ளடி வடிவைத் தருக.

ii) I யானது Eயுடன் சேர்ந்து உருவாக்கும் சேர்வையிலுள்ள


a) பிணைப்பு வகை தருக.

b) இதன் மின் கடத்தும் தன்மையை எவ்வாறு பரிசோதிப்பீர்?

## பௌதிகவியல்

**09)**

A) கட்டட வேலையின்போது மாடிக்குச் சீமெந்துக்கலவை உயர்த்தப்பயன் பட்ட உத்திகள் காட்டப்பட்டுள்ளன. ($g=10ms^{-2}$)




i)

a) 12 kg திணிவுடைய கலவை கொண்ட வாளி கட்டடத்தின் 'B' என்ற இடத்தை அடைந்த நிலையில் அது கொண்டுள்ள சக்தியின் அளவு யாது?

b) அவ்வாளி B எனும் நிலையில் இருந்து கீழே விழுந்ததெனின் அது தரையை அடிக்கும் வேகம் யாது?

c) கப்பி பழுதடைந்தபின் மாடிப்படியினுள் இச்சுமை B இற்குக் கொண்டு செல்லப்படின்,

1) மாடிப்படி எவ்வகை பொறியாகும்?


2) இப் பொறியின் வேக விகிதம் யாது?

ii)

a) கப்பியைப் பயன்படுத்தி சுமையை உயர்த்தும்போது சுமையில் தொழிற்படும் விசைகளை படம் வரைந்து குறிக்க.

b) கப்பியைப் பயன்படுத்தி சுமையை உயர்த்துவதனால் ஏற்படும் அனுகூலம் யாது?

B) அமைப்பில் ஆளியை மூடுவதன் மூலம் $27^{0}$ C லுள்ள 500g நீர் 2 நிமிடங்களில் $87^{0}$ C ஐ அடைந்தது.




i) a) இங்கு நிகழும் சக்தி மாற்றம் யாது?

b) கலக்கியின் பயன்பாடு யாது?

c) வெப்பசுருளிலிருந்து நீரிற்கு வெப்பம் கடத்தும் முறை யாது?


ii)

a) இங்கு G ஏன் பயன்படுத்தப்படுகின்றது?

b) சூழலுக்கு வெப்ப இழப்பு இல்லை எனின் நீர் பெற்ற வெப்பம் யாது?

c) மேற்படி வெப்பச் சுருள் 240 V அழுத்த வேறுபாட்டில் தொழிற்படுமாயின் அதனூடு பாயம் மின்னோட்டம் யாது?

iii) தரப்பட்டுள்ள திரவத்தில் வெவ்வேறு ஆழங்களில் அமுக்கங்களை ஒப்பிட மாணவர் குழு ஒழுங்கு செய்த அமைப்பு படத்தில் காட்டப்பட் டுள்ளது.




a) இக் கருவியின் பெயர் யாது?

b) இங்கு U குழாயில் இரசம் பயன்படுத்தாது மண்ணெண்ணை பயன்படுத்தப்படுவதன் காரணம் யாது?

c) வளிமண்டல அமுக்கம் $1x10^{4}Nm^{-2}$ எனின் S இல் தொழிற்படும் அமுக்கத்தைக் காண்க.

(மண்ணெண்ணை அடர்த்தி $790kgm^{-3}$, புவியீர்ப்பு ஆர்முடுகல் $10Nkg^{-1}$)

**10)**

A) பல்வேறு தேவைகளுக்கு மின்காந்த அலைகள் பயன்படுகின்றது.

i) a) மின்காந்த அலைகளின் இரு இயல்புகள் தருக.

b) சூரியனிலிருந்து வெப்பத்தைக் கொண்டு வரும் மின்காந்த அலை வகை எது?

c) மின்காந்த அலை வேகம் $3x10^{8}ms^{-1}$ எனின் சூரியனிலிருந்து புவிக்கு வெப்பம் வர 8 1/3 நிமிடம் எடுக்குமாயின் புவிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரம் Km இல் யாது?

ii) கழி ஒலியை பயன்படுத்தி பல்வேறு செயன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) கழி ஒலி என்றால் என்ன?

b) மனித கேள் தகவு வீச்சு யாது?

c) கழி ஒலியின் பயன்கள் 2 தருக.


iii) மின்னல் ஒளியைக் கண்ட ஒருவன் 0.4 செக்கனின் பின் இடி ஒலியை கேட்பானாயின் இடியை தோற்றுவித்த முகிற்கூட்டம் தரையிலிருந்து எவ்வளவு உயரத்தில் காணப்படுகின்றது?

(வளியில் ஒலி வேகம் $330ms^{-1}$)

B) ஒளி அலையானது ஓர் மின்காந்த அலை வகையாகும். இது தெறிப்பு, முறிவு ஆகியவற்றுக்கு உட்படுகின்றது.

i) ஒளித்தெறிப்பு விதிகளைத் தருக.

ii) பின்வருவனவற்றில் ஒளிக்கதிர் பாதையைப் பூர்த்தி செய்க.




ii) 2 cm குவியத் தூரமுடைய குழிவுவில்லை ஒன்றின் முன் 3 cm தூரத்தில் 1 cm உயரமுடைய பொருள் வைக்கப்பட்டிருப்பின் கதிர் வரிப்படத்தை வரைந்து

a) விம்ப தூரம்

b) பொருள் தூரம்

c) விம்ப உயரம்

d) விம்ப உருப் பெருக்கம்

e) இரு விம்ப இயல்பு என்பவற்றைத் தருக

## தெரிந்துகொள்ளுங்கள்

| கண்டுபிடிப்பு | கண்டுபிடிப்பாளர் | ஆண்டு |
|---|---|---|
| ஆகாய விமானம் (Aeroplan) | ரைட்சகோதரர்கள் | 1903 |
| அஸ்பிரீன் (Aspirin) | கோல்பே, ஹெயின்ரிச் | 1859 |
| அணுகுண்டு (Atom bomb) | ஃபிரிச், போஹர், பைரல்ஸ் | 1939 |
| பேனா (Ball point pen) | ஜான் டி லொடு | 1834 |
| பேனா (Fountain pen) | கிரிக்பேட்ரிக்மேக்மில்லன் | 1834 |
| மிதிவண்டி (Bicycly) | கிர்க்கேட்ரிக்மேக்மில்லன் | 1839 |
| கேபிள் கார் (Cable car) | டபிள்யூ ரிட்டர் | 1866 |
| காபரேட்டர் (Carburaettor) | கோட்லின் டைம்லர் | 1876 |
| சிமெண்ட் (Cement) | ஜோசப் ஆஸ்ப்டின் | 1824 |
| தெர்மோமீற்றர் (Centigrade thermometer) | ஆன்ட்ரஸ் செல்சியஸ் | 1742 |
| கடிகாரம் (Colock Mechanical) | ஹிஸிங்மற்றம் லியாங்ட்சன் | 1725 |
| காம்பேக்ட் டிஸ்க் (Computer) | பிலிப்ஸ் மற்றும் சோனி | 1835 |
| கான்டாக்ட் லென்ஸ் (Contact lens) | அடால்ப் இ பிக் | 1887 |
| கிரெடிக் கார்ட் (Credit Card) | லபல்ப் ஸ்வைஷடர் | 1950 |
| டைனமோ (dynamo) | ஹிப்போலைட் பிக்ஸி | 1832 |
| மின்விசிறி (Electric Fan) | டாக்ஸ்கைலர் ஸ்காட்ஸ் | 1882 |
| மின்விளக்கு (Electric Lamp) | ஜோசப் ஸ்வான் மற்றும் எடிசன் | 1879 |

# பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிட இந்தியா - பாகிஸ்தான் மீண்டும் உறுதி



பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இரு தரப்பும் வலுவான அர்ப்பணிப்பு உணர்வுடன் இருப்பதை மீண்டும் உறுதிசெய்வதாக இந்தியா - பாகிஸ்தான் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை தெரிவிக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பானி கர்ரைச் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு நடத்தினார். அதன் பின் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக்கை அவர் சந்தித்தார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையில் விசா நடைமுறைகள் தளர்வு உள்பட 2 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இந்தச் சந்திப்புக்குப் பின், சனிக்கிழமை இரவு இரு தரப்பின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

அதில், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இரு தரப்பும் வலுவான அர்ப்பணிப்பு உணர்வுடன் இருப்பதை மீண்டும் உறுதிசெய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எஸ்.எம்.கிருஷ்ணாவின் இந்தப் பயணத்தின்போது இந்தியாவுடன் பாகிஸ்தான் விசா நடைமுறைகளைத் தளர்த்துவதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதை அந்நாட்டுப் பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டியுள்ளன.

இதைப் பெரிய சாதனை என்று அவை வர்ணித்துள்ளன. அமைச்சர்கள் ரஹ்மான் மாலிக் மற்றும் ஹினா ரப்பானியுடன் கிருஷ்ணா கைகுலுக்கும் படங்களை பெரும்பாலான பத்திரிகைகளும் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளன


# சுற்றுலாப் பயணிகள் விடயத்தில் அரசியல் கலப்பு கூடாது

இலங்கை சுற்றுலாப் பயணிகள் விஷயத்தில் அரசியல் கலப்பு கூடாது என மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகன், காங்கிரஸ் எம்.பி.கள் பாதுகாப்புத் துறை அமைச்சர் அந்தோனியைச் சந்தித்துப் பேசியுள்ளனர். நானும் விரைவில் அவருடன் பேசவிருக்கிறேன்.

அதே நேரம் தமிழகத்திற்கு வரும் இலங்கை சுற்றுலாப் பயணிகள் விஷயத்தில் அரசியல் கலப்பு கூடாது. நமது அரசியல் உணர்வு இலங்கையில் வாழும் தமிழர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும். நமது அரசியல் உணர்வுகள் எந்த விதத்திலும் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்றார்.

# 8 மாநிலங்களில் டுவிட்டருக்கு தடை



கர்நாடகா, தமிழ்நாடு உள்பட 8 மாநிலங்களில் டுவிட்டர் இணையளதளத்திற்கு தடை விதிக்க மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

வடகிழக்கு மாநில மக்களிடையே கடந்த மாதம் வதந்தியை கிளப்பும் வகையில் தகவல்களை வெளியிட்டதாக கூறி இந்த நடவடிக்கையை எடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

வடகிழக்கு மாநிலத்தவர் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக பரவிய வதந்தியைத் தொடர்ந்து பெங்களூர், சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான வடகிழக்கு மாநிலத்தவர் கடந்த மாதம் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பினர்.

கர்நாடகா, தமிழ்நாடு, அஸாம், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் உட்பட 8 மாநிலங்களில் இந்த வதந்தி கிளப்பப்பட்டதாக மத்திய அரசு அடையாளம் கண்டுள்ளது.


இதனையடுத்து இந்த மாநிலங்களில் டுவிட்டர் இணையதளத்தை எப்படி முடக்குவது பற்றி தொழில்நுட்ப வல்லுநர்களிடம் மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆலோசனை கேட்டுள்ளது.

உள்துறை அமைச்சகத்தின் அறிவுரைப்படி இத்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடகிழக்கு மாநிலத்தவர் இடையே வதந்தியைக் கிளப்பியதாக இதுவரை 310 இணையதளங்களை மத்திய அரசு முடக்கியுள்ளது.

இந்தியச் செய்திகள்

# மரண ஊர்வலத்துக்கு சென்ற 10 ஆயிரம் பேர் மீது வழக்கு



கன்னியாகுமரியில் மரண ஊர்வலத்தில் பங்கேற்ற 10 ஆயிரம் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.


கன்னியாகுமரி மாவட்டம் நித்திரை விளையை சேர்ந்த எட்வின்ராஜ் என்பவர் நேற்று முன்தினம் மரணமடைந்தார். இதைத் தொடர்ந்து அவரின் இறுதி ஊர்வலம் நேற்று நடைபெறுவதாக இருந்தது.

ஆனால் இறுதி ஊர்வலத்தில் பேரணியாக செல்ல பொலிஸ் அனுமதி மறுத்துவிட்டது. இதைத் தொடர்ந்து தி.மு.க. எம்.பி. எம்.எல்.ஏ.க்கள் தலைமையில் நேற்று காலை இறுதி ஊர்வலம் சென்றது. இந்த ஊர்வலத்தில் 10 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

இதனிடையே, தடையை மீறி ஊர்வலமாக சென்ற தி.மு.க. எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் உள்பட 10 ஆயிரம் பேர் மீது தடை மீறி ஊர்வலம் சென்றதாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்தப் பேரணியால் மாவட்டம் முழுவதும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டதாகக் கூறி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# கூடங்குளத்திற்கு பேரணியாக சென்ற மக்கள் மீது தடியடி



(இடிந்தகரை)

நெல்லை மாவட்டம் இடிந்தகரையிலிருந்து, கூடங்குளம் நோக்கி பேரணியாக கிளம்பிய கிராமத்தினர் மீது போலிஸார் தடியடி நடத்தியதால் அங்கு பரபரப்பு நிலவுகிறது.

கூடங்குளம் அணு மின் நிலைய எதிர்ப்புப் போராட்டம் மீண்டும் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. கூடங்குளம் அணு மின் நிலையப் பகுதியில், கடற்கரையில் பல ஆயிரம் கிராம மக்கள் திரண்டு வந்து முகாமிட்டு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காலையில் 500 பேருக்கு மேல் இடிந்தகரை கிராமத்திலிருந்து அணி அணியாக கூடங்குளத்திற்குக் கிளம்பினர். இடிந்தகரையிலிருந்து கூடங்குளம் 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

இதையடுத்து ஏற்கனவே அங்கு வந்து குவிந்து விட்ட பொலிஸார், இடிந்தகரை மக்களைத் தடுத்து நிறுத்தினர். அப்போது பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் மூண்டது. இந்த நிலையில் பொலிஸாரை மீறி பொதுமக்கள் கிளம்ப எத்தனித்தனர். இதையடுத்து பொலிஸார் லேசான தடியடி நடத்தினர். இதையடுத்து பொதுமக்கள் சிதறி ஓடினர்.

இந்த சம்பவத்தால் தற்போது கூடங்குளத்தைப் போலவே இடிந்தகரையிலும் பதற்றம் நிலவுகிறது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடாக இந்தியா இருக்க வேண்டும்

(கோவை)

இந்தியா பொருளாதாரத்தில், வளர்ச்சி அடைந்த நாடாக இருப்பதை விட, மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடாக இருக்க வேண்டும் என தமிழக திட்ட குழு உறுப்பினர் பாலகுருசாமி பேசினார்.

கோவை எஸ்.என்.ஆர். கலை அறிவியல் கல்லூரி வெள்ளி விழா கல்லூரி அரங்கில் நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசும்போது இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்

இந்தியா பொருளாதாரத்தில், வளர்ந்து வரும் நாடாக இருக்கலாம். ஆனால், சமூக அடிப்படையில், இன்னும் வளர வில்லை. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு, பொருளாதாரம் மட்டும் போதாது. சமூக வளர்ச்சியும் முக்கியம். வரும் 2020இல், இந்தியா வல்லரசாகிவிடும் என்பது அப்துல்கலாமின் நம்பிக்கை. ஆனால், அதற்கான சாத்தியம் இல்லை. பல்கலைக்கழகங்கள் உட்பட அரசின் அனைத்து துறையிலும் இலஞ்சம் நிறைந்து இருக்கிறது. இங்கு படித்தவர்கள் செய்யும் குற்றங்கள்தான் அதிகம்.

சுதந்திரம் பெற்று 66 ஆண்டுகள் ஆகியும் ஏழ்மையும், வறுமையும் குறையவில்லை. ஒரு வேளை உணவுக்குக்கூட உத்திரவாதம் இல்லாத மக்களும் உள்ளனர். இன்றைக்கு இந்தியாவில் 25 சதவீதம் பேர் குடிசைகளிலும், 15 சதவீதம் பேர் வீதியோரங்களிலும் வாழ்கின்றனர். இன்னும் தீண்டாமை ஒழியவில்லை.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலைக்கு காத்திருப்போர், 75 இலட்சம் பேர். இதில், மூன்று இலட்சம் பேர் இன்ஜீனியர்கள். இந்நிலையில், 2020இல் இந்தியா வல்லரசாகும் என்று சொன்னால், அது எப்படி சாத்தியமாகும் என்றார்.


## வாழ்க வளமுடன்




தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர்

லஜீவன், லஜாவன்

முகவரி

மானிப்பாய், மேற்கு மானிப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# பயங்கரவாத நாடாக பாகிஸ்தானை அறிவிக்கும் திட்டம் எதுவுமில்லை

## – அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடாக பாகிஸ்தானை அறிவிப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்க அரசிலுள்ள மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹக்கானி அமைப்பு, பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாடாளுமன்றில் அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் இதைத் தெரிவித்தார்.ஹிலாரி கிளிண்டனின் இவ் அறிவிப்பைத் தொடர்ந்து, நிருபர்களிடம் பேசிய அரச மூத்த அதிகாரிகள் கூறியதாவது:

பாகிஸ்தான் நாட்டை பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடாக அறிவிக்கும் திட்டம் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. இது தொடர்பான எந்த முடிவும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே, ஒரு மனதாக எட்டப்படவில்லை. பயங்கரவாதத்துக்கு எதிரான போரில், பாகிஸ்தான் குறிப்பிடத்தக்க ஒரு நட்பு நாடாக விளங்கி வருகிறது. இந்த விசயத்தில், பாகிஸ்தானுடன் உள்ள நட்புறவைத் தொடர்ந்தும் பேணிக் காப்பதில் அமெரிக்கா, உறுதியாக உள்ளது. அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக விளங்கும், பயங்கரவாத அமைப்புகள் பாகிஸ்தானில் செயற்படுவது துரதிர்ஷ்டவசமானது.


பாகிஸ்தான் அரசுடன் சேர்ந்து பயங்கரவாத அமைப்புகளை நசுக்குவதற்கான நடவடிக்கைகளை, தொடர்ந்து மேற்கொள்வோம்.பாகிஸ்தானில் உள்ளது போன்றே உலகின் பல்வேறு நாடுகளில், பயங்கரவாத அமைப்புகள் இருக்கின்றன. இந்த நாடுகளுடன் நட்புறவை தாம் பேணிக்காத்து வரும் அதே வேளையில், பயங்கரவாத அமைப்புகளை வேரறுப்பதில் உறுதியாக உள்ளோம்.இவ்வாறு அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை ஹக்கானி பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட சூழ்நிலையில், இந்த அமைப்பை பூண்டோடு ஒழிக்கும் வகையில்; பாகிஸ்தான் தனது நடவடிக்கைகளை இரட்டிப்பாக்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து அமெரிக்க செனட்டின் தலைவர் டியான் பீன்ஸ்டன் கூறியதாவது ஹக்கானி அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு. அமெரிக்காவின் எதிரி. இந்த அமைப்பை வேரோடு அழிக்கும் வகையில், அமெரிக்கா, ஆப்கான் நாடுகளுடன் இணைந்து, பாகிஸ்தான் அரசு செயறபட வேண்டும். ஹக்கானி அமைப்பை நசுக்குவதற்கான நடவடிக்கைகளை, பாகிஸதான் இரட்டிப்பாக்க வேண்டும்.

இவ் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டதால், நிதி திரட்டுவதில் சிரமம் ஏற்படும். தனது செயற்பாடுகளையும் தொடர முடியாது. இந்த அமைப்புடன், தொடர்பு கொள்வோர், மேலும் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். இதன் காரணமாக, ஹக்கானி அமைப்பு வலுவிழந்து பயங்கரவாத தாககுதல்களை மேற்கொள்ள முடியாது. இவ்வாறு பீன்ஸ்டன் தெரிவித்தார்.

## சிரிய விவகாரம் குறித்து புடின், ஹிலாரி பேச்சு



(வலாடிவோஸ்டோக்)

சிரியா விவகாரம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ரஷ்யாவிலுள்ள வலாடிவோஸ்டோக் நகரில் நடைபெறும் ஆசியா- பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் 20இற்கும் மேற்பட்ட நாட்டுத்தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதில் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கலந்து கொண்டார். பின்னர் அவர் சிரிய விவகாரம் குறித்து ரஷ்யா ஜனாதிபதி புடின், வெளிவிவகாரத்துறை அமைச்சர் செர்கிய் லாவ்ரோவ் ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இது பற்றி ஹிலாரி கிளிண்டன் கூறுகையில், சிரியா நாட்டுப் பிரச்சினை தொடர்பாக ரஷ்யாவின் நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தீர்வு காண்பது குறித்து பேச்சுத் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

சிரியா ஜனாதிபதி அசாத்துக்கு ரஷ்யாவும், சீனாவும் ஆதரவளித்து வருகின்றன. இந்நிலையில் தற்போதைய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஹிலாரி கிளிண்டன் கூறியிருப்பது சிரிய பிரச்சினையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

## பில்கேட்ஸ், அனான் பெயர்கள் சீன அமைதி விருதிற்குப் பரிந்துரை



(பீஜிங்)

சீன அமைதி விருதுக்கு ஐ.நா. முன்னாள் பொதுச் செயலாளர் கொபி அனான், மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் உள்ளிட்டோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கன்புஷியஸ் அமைதி விருதுக்கு பரிந்துரை செய்யப்படுபவர்களின் பெயர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

சீன அரசின் சிபாரிசு எதுவும் இல்லாமல், சுதந்திரமாக முடிவெடுத்தே இப்பெயர்களை அறிவித்ததாக விருதை வழங்கும் குழுவினர் தெரிவித்துள்ளனர். ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி,மூன், தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவத்ரா,சீன சமூக சேவகர் வாங் டிங்கோ, பீஜிங் பல்கலை. பேராசிரியர் டேங் யீஜி, சீன விஞ்ஞானி யுவான் லாங்பிங், 11ஆவது பன்சென் லாமா ஆகியோரின் பெயர்களும் இவ்விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

திபெத்திய மத தலைவர் தலாய் லாமாவுக்கு அடுத்து 2ஆவது நிலையில் உள்ளவர் பன்சென் லாமா. ஆனால், இவர் சீன அரசால் நியமிக்கப்பட்டவர் என்பதால் இவரைத் தீபெத்தியர்கள் மதத்தலைவராக ஏற்றுக்கொள்வதில்லை.

## விமானத்தாக்குதல்கள் மூலம் ஒசாமாவை கொல்லத்திட்டம்



(வோஷிங்டன்)

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை கடந்தாண்டு அமெரிக்க அதிரடிப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

இந்தப் படையில் இருந்த வீரர் ஒருவர், ஒசாமா பின்லேடன் கொல் லப்பட்டது குறித்து புத்தகமாக தொகுத்துள்ளார்.

அதில், ஒசாமா பின்லேடனை கொல்ல ஜனாதிபதி ஒபாமாவும், ஆலோசகர்களும் பல்வேறு திட்டங்கள் குறித்து தீவிரமாக ஆலோசித்தனர்.

முதலில் விமானம் மூலம் சென்று குண்டுகள் வீசி வீட்டை தகர்த்து பின்லேடனை கொலை செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதற்கு இராணுவ அமைச்சர் உட்பட பலர் ஆதரவு தெரிவித்தனர். ஆனால் கடைசி நேரத்தில் அத்திட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஈராக் துணை ஜனாதிபதிக்கு மரண தண்டனை தீர்ப்பு




(பாக்தாத்)

ஈராக் துணை ஜனாதிபதி தாரிக் அல் ஹாஷ்மி, 45 பேரைக் கொன்றது தொடர்பான வழக்கில், அந்நாட்டு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை அறிவித்துள்ளது. ஈராக்கில் சதாம் ஹூசைன ஆட்சி வீழ்த்தப்பட்ட பின், அமெரிக்காவின் உதவியுடன் அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந் தது. துணை ஜனாதிபதி பதவியில் இருந்த தாரிக் அல் ஹாஷ்மி, 26 சம்பவங்களில் 46 பேரை சுட்டுக் கொல்ல உத்தரவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வழக்கில், அவரை ஆஜராகி வாக்கு மூலம் அளிக்கும்படி பாக்தாத் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டி ருந்தது.

ஆனால், துருக்கி சென்ற ஹாஷ்மி மீண்டும் நாடு திரும்பவில்லை. இதற்கிடையே, ஹாஷ்மி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், நீதிமன்றம் நேற்று முன்தினம் அவருக்கு மரண தண்டனை விதித்து, தீர்ப்பளித்துள்ளது.கடந்த 2006ஆம் ஆண்டு, இவர், துணை அதிபராக பொறுப்பேற்றார். கடந்த 2010இல் நடந்த தேர்தலில் மீண்டும் இவர் துணை ஜனாதிபதியாக தெரிவானார்.

## ஈரானைத் தாக்குவதற்கு தயாராகிறது இஸ்ரேல்



(ஜெருசலேம்)

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளின் எச்சரிக்கையை மீறி ஈரான் அணுகுண்டு தயாரித்து வருகிறது. இந்த அணுக்குண்டு தங்கள் நாட்டுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும் என்று இஸ்ரேல் கருதுகிறது.

எனவே அதை அழிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே ஈராக் இதேபோல அணுஉலையை உருவாக்கிய போது இஸ்ரேல் திடீரென விமானத் தாக்குதல் நடத்தி அவற்றை முற்றிலும் அழித்தது. அதைப் போன்ற தாக்குதல் ஈரான் மீது நடக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

சமீப காலமாக இஸ்ரேல் தனது படையை பல்வேறு வகையிலும் தயார்படுத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக விமான படை பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. ஈரான் அணுஉலையை தாக்குவதற்காகத்தான் இந்தப் பயிற்சி நடப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும் அடிக்கடி இராணுவ இரகசியக் கூட்டங்களும் நடந்து வருகின்றன. எந்த நேரத்திலும் இஸ்ரேல் விமானங்கள் ஈரானுக்குள் பறந்து அணுஉலை மீது குண்டுவீசி தாக்கலாம் என்ற நிலை உள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்காவை சேர்ந்த முன்னாள் விமானப்படை அதிகாரியும் இராணுவ விமானத் தாக்குதல் தொடர்பாக கட்டுரைகள் எழுதிவரும் வாலடர் போயன் என்பவர் இஸ்ரேல், ஈரான்மீது தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புகள் நெருங்கியிருப்பதாகக் கூறியுள்ளார்.

ஆனால் இந்தத் தாக்குதல் மூலம் இஸ்ரேல் பெரிய அளவில் சாதிக்க முடியாது என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அதிற்கு பதிலடி கொடுப்பதற்காக ஈரானும் தயாராகி வருகிறது. அதன் விமானப் படைகள் முழுவீச்சில் தயார் நிலையில் இருக்கின்றன. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன. இஸ்ரேல் தாக்கினால் உடனே இஸ்ரேல் மீது போர் தொடுத்து அந்த நாட்டில் தாக்குதல் நடத்துவதற்கும் ஈரான் தயாராகி வருகிறது

## சர்ச்சைக்குரிய தீவு குறித்து சீன, ஜப்பான் தலைவர்கள் பேச்சு

(மொஸ்கோ)



சீனா- ஜப்பான் நாடுகளுக்கிடையே அமைநதுள்ள சர்ச்சைக்குரிய தீவுகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினை உருவாகியுள்ளது.

இவ் விரு நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்கள் பிரச்சினைக்குரிய தீவுகளுக்கு சென்று கொடியேற்றினார்கள்.

இந்தத் தீவுகள் ஜப்பான் நாட்டை சேர்ந்த தனியாருக்கு சொந்தமானது. எனவே இதை அரசே விலைக்கு வாங்கலாம் என ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்தது.

ஆனால் இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் நடைபெறும் ஆசிய- பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க சென்ற சீன ஜனாதிபதி ஹு ஜிண்டாவோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா ஆகியோர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுமார் 15 நிமிடங்கள்வரை நீடித்த இந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற அம்சங்கள் குறித்த விவரம் வெளியிடப்படவில்லை

# யாழ். கரையோர வெளிச்சவீடுகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பருத்தித்துறை முனைப்பகுதியிலும் காரைநகர் கற்கோவளம் பகுதியிலும் யாழ். குடாக்கடல் முகத்துவாரம் பகுதியிலும் அமைந்திருந்த அழிந்த மூன்று வெளிச்ச வீடுகளை மீள அமைத்துத் தரும்படி யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் அந்தப் பகுதி கடற்றொழிலாளர் சமூகம் கோரியுள்ளது.

பண்டைய காலத்தில் குறித்த பகுதிகளில் வெளிச்சவீடுகள் அமைந்திருந்ததாகவும் இதனால் மேற்படி பகுதிகளில் இருந்து கடற்றொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் இரவு நேரங்களில் தமது தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு கரை திரும்ப இலகுவாக இருந்தது. அதன் பின்னர் நிலவிய யுத்தகால நடவடிக்கைகளால் அவற்றைப் பராமரிக்க முடியாமல் அவை சேதமடைந்து அழிந்து கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர் இரவு நேரங்களில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதன் காரணமாக மீளவும் இந்தப் பகுதிகளில் வெளிச்ச வீடுகளை அமைத்துத்தரும்படி யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் கோரியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை நேற்று யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற யாழ். பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் யாழ் குடாக்கடலில் முகத்துவாரம் பகுதியில் இருந்த வெளிச்சவீட்டினை மீள நிர்மாணித்துத் தரும்படி அப்பகுதி மக்களால் கோரப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்து அபிவிருத்திக் குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது.

இதேவேளை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மற்றும் ஐ.ஓ.எம். நிறுவனம் என்பன அவ்வாறான வெளிச்சவீட்டை அமைத்துத் தர இயலாது என்று தெரிவித்த நிலையில் ஐ.ஓ.எம். நிறுவனம் மின்சார லைற் (போக்கஸ்) பொருத்துவதற்குச் சம்மதம் தெரிவித்திருந்த போதும் அது கடற்றொழிலாளர்களினால் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் கடற்றொழில நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பா)

# நல்லூரில் நான்கு பாடசாலைகளை அபிவிருத்தி செய்யத் திட்டம்

(நல்லூர்)

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் ஐந்தாயிரம் ஆரம்பப் பாடசாலைகளையும், ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நல்லூர் கல்விக்கோட்டத்தில் நான்கு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கோண்டாவில் வடக்கு றோ.க. க.த.க. பாடசாலை, கொக்குவில் கிழக்குப் புகையிரத நிலைய வீதி, கத்தோலிக்க கிறிஸ்தவ தமிழ்க் கலவன் பாடசாலை, கொக்குவில் மேற்கு ஸ்தான கத்தோலிக்க கிறிஸ்தவ பாடசாலை ஆகியனவே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவையாகும்.

தெரிவுசெய்யப்பட்ட நான்கு பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா ஐந்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளன.

# என்றுமில்லாத வகையில் தீவகத்தின் அபிவிருத்தி

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பெருமிதம்

(தீவகம்)

அரசின் நிதி ஒதுக்கீடு இல்லாது எந்தவொரு பிரதேச சபையும் அபிவிருத்தி செயற்பாடுகளை முழுமையாக செயற்படுத்த முடியாதென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தீவகப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையினால் உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட முப்பரிமாண நூலகக் கண்காட்சி அறிமுக வைபவமும் கையெழுத்து சஞ்சிகைக்கான பரிசளிப்பு விழாவும் நேற்றைய தினம் வேலணை தேவா கலையரங்கில் பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா (போல்) தலைமையில நடைபெற்ற போதே நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தீவகத்தில் நாம் தொண்ணூறுகளில் கால்பதித்தது முதல் அனைத்துப் பிரதேச சபைகளும் எமது ஆளுகையிலேயே உள்ளது. இதனுடன் குறித்த பிரதேச சபைகளின் செயற்பாடுகளை அதீத அக்கறை செலுத்திவருவதுடன் அரசுடன் இணைந்து செயலாற்றுவதன் மூலம் பாரிய அபிவிருத்திப் பணிகளை துரிதமாக நிறைவேற்றி வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

தீவகத்தின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிக் காணப்பட்ட வேளையில் கௌரவ அமைச்சர் அவர்களும் நாமும் பல்வேறுபட்ட கல்வி மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு தீவகத்தின் கல்வி நிலையை மேம்படுத்தியுள்ளோம். இதேவேளை பிரதேச சபைக்கு உட்பட்ட சாதாரண வீதியினை புனரமைப்பு செய்வதற்கு கூட எந்தவொரு பிரதேச சபைகளிடமும் நிதியில்லை ஆனால் இவற்றை நாமே நெல்சிப், என்ரிப் போன்ற திட்டங்களின் மூலமே புனரமைப்பு செய்து வருகின்றோம் என்றார்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மாணவர்கள் வெறுமனே பாடசாலை கற்றல் செயற்பாடுகளுடன் நின்று விடாது சிறந்த நூல்களைப் படிப்பதன் மூலம் அறிவு வளர்ச்சியினை பெற்றுக் கொள்வதுடன், ஒழுக்க விழுமியங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தெரிவித்ததுடன் வேலணைப் பிரதேச சபை பல்வேறு அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்து வருவதுடன் தமது பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பாடசாலைகள், கல்விமான்கள் பிரதேச மக்களை ஒருங்கிணைத்து முப்பரிமாண நூலகக் கண்காட்சி விழாவினை சிறந்த முறையில் முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.



# திருநெல்வேலி கொலைச் சம்பவம் பொலிஸ் வலையில் 7பேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் பிற்பகலில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏழுபேர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது தற்சமயம் பொலிஸ் விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரியவருகின்றது. நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் அமைந்திருக்கும் பகுதியில் அதே பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் ஜென்சுலின் பிரபா (வயது-25) என்ற இளம் குடும்பஸ்தர் மீது மேற்கொள்ளப்பட்ட சரமாரியான வாள் வெட்டில் அவர் ஸ்தலத்தில் பலியாகியமையும் அவரது நண்பர் உட்பட இருவர் அந்தக் குழுவினரின் வாள் வெட்டில் படுகாயமடைந்தமையும் தெரிந்ததே.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## பி.பி.சி. சங்கர்...

கேட்டு வந்த அந்தக்கால நேயர்களை மயக்கிய அந்தக் குரலுக்குச் சொந்தக்காரரான சங்கரன் சங்கரமூர்த்தி மறைந்துவிட்டார்.

கடந்த சில மாதங்களாகவே நோய்வாய்ப்பட்டிருந்த சங்கரமூர்த்தி, லண்டன் மருத்துவமனை ஒன்றில் சிறுநீரக மற்றும் இருதய நோயால் காலமானார். அவருக்கு வயது 82. மறைந்த சங்கரமூர்த்தி, 1966 இலிருந்து 1991 வரை தமிழோசையின் பணியாற்றினார். அவர் பணியாற்றிய காலப் பகுதியில் தமிழோசை வாரமிருமுறை என்ற நிலையிலிருந்து வாரம் ஐந்து நாட்கள் ஒலிபரப்பு என்ற அளவுக்கு வளர்ந்தது.

தமிழோசையில் 1970கள் மற்றும் 80களில் பெரும்பாலும் சஞ்சிகை வடிவில் இருந்த நிகழ்ச்சி, சங்கரமூர்த்தியின் தமிழ்ப் புலமைக்கு ஒரு பெரிய களத்தைத் தோற்றுவித்துத் தந்தது. ஆழ்ந்த தமிழ்ப் புலமை கொண்ட சங்கரமூர்த்தி, அந்தக் காலகட்டத்தில் ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் பிரபல நாடகங்கள் பலவற்றையும், கிரேக்க மகாகவி ஹோமரின் இதிகாசங்களான இலியட், ஒடிசி போன்றவற்றையும், தமிழில் கவிதை நாடக வடிவிலேயே தந்து, அவை நேயர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன.

## மக்களின்...

ஒப்பந்தக்காரர்கள் தடையாகவோ அல்லது வேலைகளை மெதுவாக முன்னெடுத்தாலோ அவற்றை புதிய ஒப்பந்தக்காரர்களிடம் வழங்குமாறும் கேட்டுக்கொண்டதுடன், வடிகால்களுக்குத் தடை ஏற்படாத வகையில் கட்டட நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும், இதுதொடர்பில் துறைசார்ந்தவர்கள் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்ட அமைச்சர் இக்கூட்டத்தில் கலந்துரையாடுவது மட்டுமல்ல முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த கால அரசியல் தலைமைகள் விட்ட தவறுகளினாலேயே எமது மக்கள் அழிவு யுத்தத்திற்கு முகம் கொடுத்ததுடன் கையேந்தும் நிலைமைக்கும் உள்ளாகினர் என்றும் அந்த நிலையை மாற்றியமைப்பதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை கல்முனை, மண்டைதீவு, குருநகர், உள்ளடங்கிய பகுதிகளில் வெளிச்சவீடு அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இதில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தோரிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. இதன்போது யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகர ஆணையாளர் பிரணவநாதன் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# யாழில் 'சிப்தொறா' புலமைப்பரிசில் அமுலாகிறது திட்டம்

சமுர்த்தி 'சிப்தொறா' புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பங்கள் சமுர்த்தி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளது. இதன்படி கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த. (சா.த) பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் விசேட சித்தி உட்பட ஏனைய பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இப் புலமைப்பரிசில் கொடுப்பனவுக்காக விண்ணப்பங்களைத் தமது கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி அலுவலரிடம் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கிடைக்கப்பெறும் விண்ணபங்களில் இருந்து பிரதேச செயலரினால் நடத்தப்படும் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் செயற்பாட்டுக்காக மாதம் தோறும் ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் நிதியாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.(26)

# முள்ளிவாய்க்காலிலும் மீள்குடியமர்வு ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மக்களில் மீள்குடியேற விரும்புவோர் எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் மீள்குடியமர்த்தப்பட உள்ளனர்.

முல்லைத்தீவு கரைத்துறைப் பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அம்பலவன் பொக்கனை, செம்பன்குன்று கிராமம் மற்றும் முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

மீள் குடியமர விரும்புவோர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலைக்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு மேற்கு கைவேலி கிராமம் உட்பட வேணாவில் தவிர்ந்த ஏனைய கிராமங்கள் மற்றும் ஆனந்தபுரம் கிராமம் ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்குப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன் விழா மண்டபத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற விரும்பும் மக்கள் வருகை தரும்போது தாம வசித்த கிராம சேவையாளரின் கடிதம் மற்றும் பிரதேச செயலரின் மேல் ஒப்பம் இடப்பட்ட பதிவு நீக்கற் கடிதத்துடன் வருகை தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (04)

## கூட்டமைப்பின்...

இந்த இரண்டு கட்சிகளும் முயற்சித்து வருகின்றன. கிழக்கு மாகாணசபைக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர் விபரங்கள், தேர்தல் ஆணையாளரினால் வர்த்தமானி அறிக்கையில் வெளியிடப்படும் வரை மாகாணசபை நிர்வாகம் தொடர்பில் கட்சிகளின் செயலாளர்களினால் விடுக்கப்படும் கோரிக்கைகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்று கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணசபை தொடர்பில் உள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே தான் எந்தவித நடவடிக்கையையும் முன்னெடுப்பதாகவும் ஆளுநர் அறிவித்தார்.

# யோகபுரத்துக்கு மின்சாரம் எப்போது ஏக்கத்துடன் காத்திருக்கும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள யோகபுரம் கிராமத்தில் வசித்துவரும் 40 குடும்பங்களுக்கு இதுவரை மின்சார வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் மக்கள் மீள் குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் மின்சார வசதிகள் இன்றி இரவு வேளைகளில் தாம் பல்வேறு கஷ்ட நிலைக்கு ஆளாவதாக அம்மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் 125 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் 40 குடும்பங்களுக்கே மின்சார வசதிகள் வழங்கப்படவில்லை எனவும், இதனால் மண்ணெண்ணெய் விளக்கிலேயே காலம் கழிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

மின்சார விநியோகம் குறித்து கிராம அலுவலர் முதல் உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள கடிதம் மூலம் அறிவித்தும் இதுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

பின்தங்கிய கிராமமாகக் காணப்படும் இக்கிராமத்தில் பாடசாலை மாணவர்கள் பலர் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் மின்சார வசதியின்றி சிரமப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள் மின்சாரத் தேவையைக் கருத்திற்கொண்டு மின்சார விநியோகத்தை பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# வறிய மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்கள் வசதி குறைந்த மாணவர்களுக்கான உதவித் திட்டத்தின்மூலம் பயனடைந்து வருவதாகத் தெரியவருகின்றது.

இத்திட்டத்தின்மூலம் யாழ். பிரதேச செயலகத்தினால் 200 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் முதற்கட்டமாக 100 மாணவர்கள் பயனடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த 100 பேரில் தாய் தந்தையை இழந்த சுமார் 70 பேர் உள்ளடங்குவதாகவும் தெரியவருகின்றது.

நேற்று யாழ். பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ் வறிய மாணவர்களுக்கான கல்வி உதவித் திட்டம் குறித்த முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# குடிகார சாரதிகளைத் தேடி பொலிஸார் வேட்டை

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைத் தேடி பொலிஸார் நேற்று முதல் தீவிர வலைவீச்சில் இறங்கியுள்ளனர். இது குறித்து போக்குவரத்துப் பிரிவுப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னர் அதிகமாக இரவு நேரங்களிலேயே சாரதிகள் சோதனை செய்யப்பட்டதாகவும் ஆனால் இனி 24 மணிநேரமும் சோதனை செய்யப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. குடிபோதையில் வாகனம் செலுத்தி பொலிஸாரிடம் அகப்பட்டு வழக்குத் தாக்கல் செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் 151 ஆவது அத்தியாயத்தின் 216 ஆவது சரத்தின்படி பின்வரும் தண்டனைகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிபோதையில் வாகனம் செலுத்தல்:- 2000 ரூபா அபராதம், 3 மாத சிறை தண்டனை, ஒரு வருடத்திற்கான சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

குடிபோதையில் பயணிகள் வாகனம் செலுத்துதல்:- 3000 ரூபா அபராதம், 6 மாத சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

குடிபோதையில் வாகனம் செலுத்தி ஒருவருக்கு காயம் ஏற்படுத்தல்:- 5000 ரூபா அபராதம், 5 வருட சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து.

குடிபோதையில் வாகனம் செலுத்தி ஒருவருக்கு உயிர்ச் சேதம் ஏற்படுத்தல்:- 10 வருட சிறை, சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து. மேலும் குடிபோதையில் வாகனம் செலுத்தினால் வாகனத்தின் உரிமையாளர் மீதும் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளும் உண்டு.

# வீடு உடைத்துக் கொள்ளை சந்தேகத்தில் ஒருவர் கைது



(வடமராட்சி)

வடமராட்சி கரணவாய் மூத்த விநாயாகர் கோயில் பகுதியில் பூட்டியிருந்த வீடு உடைத்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள பாலசுந்தரம் திலகவதி என்பவர் கோயில் கும்பிடுவதற்காக காலை 9.00 மணியளவில் அருகிலிருந்த கோயிலுக்குச் சென்றுள்ளார். இந்த நேரத்தைப் பயன்படுத்தி அவரது வீடு உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளது.

அந்த வேளை உறவினர் ஒருவர் தற்செயலாக குறித்த வீட்டுக்குச் சென்றுள்ளார். இதனை அவதானித்த கொள்ளையில் ஈடுபட்ட நபர் அங்கிருந்து தப்பியோடி விட்டார்.

இச்சம்பவம் குறித்து வீட்டார் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து வீட்டிற்கு அருகில் கராஜ் வைத்திருக்கும் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கரணவாய் பகுதியில் கடந்த காலங்களிலும் களவுகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (116)

# பரிந்துரைகளின் அமுலாக்கம் அரசுக்கு உதவி வழங்கத் தயார்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு தாம் ஒத்துழைப்பு வழங்க முடியும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தக்கூடிய இயலுமையை உருவாக்கிக் கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவிகள் வழங்கப்படும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள 58 ஆவது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னர், கமலேஷ் சர்மா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.



அபிவிருத்தி, ஜனநாயகம் மற்றும் பல்வகைமை போன்றவற்றை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்யும் கமலேஷ் சர்மா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

# கண்டித் தபால் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில்

(கொழும்பு)

கண்டி பிரதான தபால் அலுவலக ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தபால் அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் கனிஷ்ட ஊழியர்களை கீழ்த்தரமாக நடத்துவதாக எதிர்ப்புத் தெரிவித்து பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுவதாக அகில இலங்கை தபால் மற்றும் தொடர்பாடல் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் தபால் பரிமாற்றம், விநியோகம் உள்ளிட்ட அன்றாட பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் பணிப்பகிஷ்கரிப்பில் 300 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றுள்ளதாக அகில இலங்கை தபால் மற்றும் தொடர்பாடல் சேவை சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### சதாசிவம் சிறிஸ்கந்தராசா



வேலணை 2 ஆம் வட்டாரத்தை (சின்னமடு) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிறிஸ்கந்தராசா 09.09.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலன் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், பகீரதன், பார்த்தீபன், ஜனார்த்தனன், அரிகரன், பவதாரணியின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற வரதராஜன், புவனேஸ்வரி, றாஜேஸ்வரி, நாகேஸ்வரி, தெய்வேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கந்தையா விநாயகன், செல்வரத்தினம் வடிவேல், காலஞ்சென்ற தங்கம்மா உமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரகலாதன் (அப்பன்), சிறீபரன், நித்தியானந்தன், பிரதலதாகஜன், தருமராசா, பிரியதர்சன், நளினி ஜெகப்பிரதாபன், திலக்சன், தகீலன், துவிசாளினி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2012) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக, சரவணை பொன்னாங்தண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்
சரவணை, வேலணை.

(C/1720)

தகவல்
குடும்பத்தினர்.

# கையடக்கத் தொலைபேசி களவாடிய சிப்பாய் கைது

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவில் நெல்சன் சினிமா திரையரங்கத்திற்கு முன்னால் 36000 ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை களவாடிய கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றதாகத் திருகோணமலை துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர். களவாடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.